
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் [illegible]9 ]  ரௌத்திரி ஆண்டு ஆனித்திங்கள் 10—7—80  [ இதழ் 8



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

என்போல் மலசடினர்
எவ்விடத்தும் கண்டதுண்டோ
இன்பே மதுரைக்
கிறைவனே — அன்(பு)ஏதும்
இல்லா தெனையாண்ட
எண்ணத்தால் தேவரீர்
எல்லாமும் வல்லசித்தரே

— சொக்கநாத வெண்பா. 66

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 | 10—7—80 | இதழ் 8

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | வரவேற்கிறோம்! வற்புறுத்துகிறோம் ... | 337 |
| உ | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | 341 |
| 3 | பாவம் பற்று ... | 349 |
| 4 | குழப்பமும் தெளிவும் ... | 353 |
| 5 | அன்னையருள் மாலை ... | 361 |
| 6 | திருவிழிமிழலைத் தலச் சிறப்பு ... | 362 |
| 7 | அபிராமி அந்தாதி ... | 371 |
| 8 | கடிதங்கள் ... | 375 |
| 9 | செய்திகள் ... | 377 |
| 10 | எதிர்காலம் ... | 380 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி - ஆனி - 10—7—80 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## வரவேற்கிறோம்! வற்புறுத்துகிறோம்!!

**நல்வரவு கூறுகிறோம்:**

சிறிய இடைவெளிக்குப் பிறகு, தமிழகமக்களின் பெரும்பான்மை ஆதரவினைப்பெற்று, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கிறது. தலைமைப் பொறுப்பினை ஏற்றிருக்கும் முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கும் புதிய அமைச்சரவைக்கும் ஞானசம்பந்தம் நல்வரவுகூறி இனிய வாழ்த்துக்களையும் ஆசியாக வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது. தம் கட்சி பெருவெற்றி பெற்ற வுடனேயே, நன்றியுணர்வோடு கர்நாடகம் சென்று தம் குல தெய்வத்தை வழிபட்டுமீண்ட முதலமைச்சர் அவர்களின் பக்தி யுள்ளம் கண்டு ஞானசம்பந்தம் பூரிப்படைகிறது. புதிதாக மீண்டும் அரசுப்பொறுப்பினை ஏற்றுள்ள ஆட்சியாளர்களுக்கு, தமிழகத்தில் வாழும் இலட்சோபலட்சம் மக்களின் சார்பில் பக்தி மற்றும் பண்பாட்டு வளர்ச்சித் தொடர்பாகச் சிலவற்றை நினைவூட்ட விரும்புகின்றோம்.

**கடமையைச்செய்கிறோம்:**

தமிழகத்தின் பெருமைக்குக் கட்டியங்கூறி நிற்கும், வான் முட்டும் கோபுரங்களோடு கூடிய சைவ - வைணவக் கோயில்களுள் பெரும்பாலானவை, நித்திய - நைமித்திய வழிபாட்டிற்குக்கூட வளமிருந்தும் வழியின்றி. இங்கே பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும் இயலாத நிலையில் பெருந்திருப்பணிகளை எதிர்நோக்கி நிற்கும் அவல நிலையினை மீண்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம். தற்சார்பு உடையனவாய், பிறருடைய உதவியை வேண்டாத அளவிற்கு உடைமைகளைப் பெற்றிருந்தும், 'எல்லாம் இருந்தும் ஒன்றுமில்லாத' அவலநிலை இவற்றிற்கு ஏன்வந்தது என்பதனை ஆராயவேண்டிய பொறுப்பும் - கடமையும் இந்த அரசுக்கு உண்டு என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்' என்பார்கள். மீண்டும் மீண்டும் அரசின் கவனத்திற்குத் தமிழகத் திருக்கோயில்களின் - இயங்க இயலா அவலநிலையினை நம்பிக்கையோடு எடுத்துரைத்து உரிய நிவாரணம் காணத் தூண்டுவது எமது தலையாய கடமையாகிறது.

**ஒருசந்தேகம் கேட்கிறோம் :**

**' பக்திமிக்க மக்களை இந்த அரசு மதிக்கிறது; கோயிலுக்குப் பெரும் கட்டடங்களைக் கட்டவேண்டிய பணத்தைக்கொண்டு சிலர் வசதியாகத் தங்கள்வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள் '** இவை தமிழ்நாடு இந்து சமய அறநிலைய அமைச்சர் சில நாட்களுக்கு முன் பேசியபேச்சு. முன்னரே இரண்டரை ஆண்டுகள் இவ்வாறான ஆறுதல் உரைகளைக்கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள் தமிழக மக்கள். மீண்டும் அதே பாணியில் அமைச்சரின் உரை அமைகிறது. 'பக்தி மிக்க மக்களை இந்த அரசு மதிக்கிறது' என்ற பேச்சின் உண்மையைப் புரிந்து கொள்ள இயலாது குழம்புகின்றனர். சமுதாயத்தின் பெயரால், சமூகநலம் பேணிய தலைவர்களுக்குச் சிலை எடுத்தல் - விழாக்காணுதல் போன்ற சிறப்புக்களை இவ்வரசு செய்து வருகிறது. அதுபோல, சமயத்தின் பெயரால் மொழி நலம் மற்றும் சமூக நலம் பேணி பண்பாடு காத்த சமயப் பெரியோர்களாகிய நாயன்மார்கள் - ஆழ்வார்கள்முதலியவர்களுக்கும் இவ்வரசு சிறப்புச் செய்யலாம். இவற்றை எல்லாம் எதிர்பாராது நமது முன்னோர்கள் சமயத்தின் பெயரால், சமூக நலம் பேணிப் பண்பாடுகாத்த சமயப் பெரியோர்களாகிய நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களுக்கு ஆலயந்தோறும் திருவுருவங்கள் அமைத்து முன்னரே தங்கள் நன்றியுணர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்கள். அத்தகு பெருமை மிக்க சமயப் பெரியோர்களால் போற்றி வணங்கப்பெற்ற இறைவன்

எழுந்தருளியுள்ள திருக்கோயில்களுக்கு மன்னர்களும், வள்ளல்களும், செல்வர்களும், பக்தியுள்ளம்கொண்ட மக்களும் வழங்கிய அறச் சொத்துக்களைப் பாதுகாத்துத்தாருங்கள் என்றே அரசினை வேண்டு கின்றோம். பிள்ளையில்லாச்சொத்துக்கள்போல் யார்யார்கையிலேயோ சிக்கிக்கிடக்கும் ஆலயங்களின் நிலவருவாயை உறுதிசெய்யுங்கள் என்றே வேண்டுகோள் விடுக்கிறோம்.

## விளக்கம் வேண்டுகின்றோம் :

கோயில் சொத்துக்களைச் சிலர் தமதாக்கிக்கொண்டு உல்லாச வாழ்வு வாழ்கிறார்கள் . என்பதைப் பட்டாங்கு மக்களுக்கு எடுத் துரைக்கும் அறநிலைய அமைச்சர் அவர்களின் நல்லுள்ளத்தை வரவேற்கிறோம். பாரம்பரியம் மிக்க அறநிலையங்களை வாழ வைக்க வேண்டுமென்ற அமைச்சர் அவர்களின் நல்லுள்ளத்திற்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம். அறநிலையங்களின் உடைமைகளைத் தமதாக்கிக்கொண்டு பலர் உல்லாச வாழ்வு வாழ்கிறார்கள் என்பதை யாரோ பொதுமக்களில் ஒருவர் பேசினால் அதுபற்றி மக்கள் அதிக அக்கரைகொள்ளமாட்டர்கள். விபரங்கள் தெரிந்த தமிழக மக்கள் இந்தத் துறையின் பொறுப்பில் உள்ள அமைச்சரே இப்படி ஒருசெய் தியை வெளியிட்டிருப்பது கண்டு வியப்படைகிறார்கள். தவறுகளைத் தவறு என்று உணர்ந்த பின்னர் அவைகளைத் திருத்தக்கூடிய அதிகாரபலம் உடையவர்கள் அவற்றைச் செய்யாது காலந்தாழ்த் துவது வியப்பாகவேயுள்ளது. தக்க ஓர் அறிஞர் குழுவை நியமித்து அடிமுதல் முடிவரை இத்துறையிலுள்ள குறைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு இனியாவது முற்படும் என்று நம்புகின்றோம்.

## நினைவுகூர்கிறோம் :

நூற்றுக்கணக்கான தமிழகத்துக் கலைவளர் மாளிகைகளாகத் திகழும் திருக்கோயில்கள், பல கோடிக்கணக்கான ரூபாய்த் திருப் பணிகளை எதிர்நோக்கிப் புகையுண்ட ஓவியங்களாகப் பொலிவு குன்றியுள்ளன. சிதைந்த கோபுரங்கள், இடிந்தமதில்கள், வேரோடிப் பிளந்துகிடக்கும் மண்டபங்கள், எண்ணெய்காணாத திருமேனிகள் என அழகிழந்துகிடக்கும் தமிழகச் சைவ-வைணவத் திருக்கோயில் களைப் புதிய அரசு கருணையோடு முன்வந்து பாதுகாக்கும் என்று நம்புகின்றோம். ஒரு சமயச்சார்பற்ற அரசிடம் சைவ சமயத்தின் வளர்ச்சிக்குப் பொருள் உதவி ஏதும் நாங்கள் கேட்கவில்லை இவற் றின் வளர்ச்சிக்கென உள்ள அறச்சொத்துக்களை முழுமையாக இவற்றின் வளர்ச்சிக்கே பயன்பட உதவுங்கள் என்றே வேண்டுகோள்

விடுக்கிறோம். புதிய கலைச்செல்வங்களைப் படைக்க நமக்கு இயலாத போது, முன்னோர் படைத்துவைத்தவற்றைப் பாதுகாத்தாவது வைக்கவேண்டியது நமது கடமை இதை உரியபோதில் செய்யத் தவறினால் பிற்காலச் சந்ததியார்களின் பழிப்புக்கும் இழிப்புக்கும் நாம் ஆளாக நேரிடும் என்பதைப் பொறுப்புள்ள ஒவ்வொருவரும் நினைவு கூரவேண்டும்.

## நம்பிக்கையோடு காத்திருக்கிறோம் :

கடவுள் நம்பிக்கையும், பக்தியும் மிக்க மக்களே தமிழகத்தில் பெரும்பான்மையினர். கோயில்கள் அவர்களுக்காக மட்டுமில்லை. அவை ஒருநாட்டின் கலாசார பண்பாட்டுச் சின்னங்கள். இவற்றைப் பாதுகாக்கும் கடமையும் பொறுப்பும் ஆட்சியாளர்களுக்குச் சிறப்பாக உரியது. வாய்ப்புக் கிடைத்திருக்கும் காலத்தில் செய்யவேண்டுவன வற்றைச் சிறக்கச் செய்து வரலாற்றில் இடம் பெறுவது சான்றோர் செயல். அரசு சான்றாண்மை மிக்கதாகவே செயல்படும் என்று மீண்டும் இதனைத் தேர்ந்தெடுத்த மக்கள் நம்பிக்கையோடு காத்திருக் கிறார்கள்.

> "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
> தம்புகழ் நிறிஇத் தாம்மாய்ந் தனரே"

என்ற புறநானூற்றுப் புலவர் வாக்கும்,

> "கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
> சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

என்ற திருக்குறளும் இங்கே நினைவுகூரத்தக்கது. புலவரைப் போற்றும் பொன்மனச்செம்மலின் ஆட்சி, புலவர்கள் போற்றிய பொன் மொழிகளைப் பொன்னேபோல் புரப்பதாக; புரந்து சிறப்பதாக.

---

## அட்டைப்படம் :

**திருக்கடவூர் அருள்மிகு அபிராமி அம்மை.**

**ஆடி வெள்ளிக்கிழமைகளில்**

**சந்தனக்காப்பு அலங்காரம், நவசக்தி அருச்சனைகள் நடைபெறும்.**

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனத் திருமடத்தில்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டி நடைபெற்ற

சமயப் பயிற்சி வகுப்புத் தொடக்கநாளில் வழங்கியருளிய

# ஆசியுரை

26—5—1980

இற்றைக்கு நானூற்றைம்பது ஆண்டுகட்குமுன் இந்த ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஆதிகுருமூர்த்திகள், ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் ஜீவசமாதி கூடிய புனித இடமே ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகத் திகழ்கிறது. இக்தருமூர்த்திகளின் குருபூஜைத் திருவிழாவும், ஸ்ரீ ஞானபுரீசுவரர் பெருவிழாவும் இன்றுமுதல் பத்து நாட்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களையொட்டி ஆண்டு தோறும் நடைபெறும் சமயப் பயிற்சி வகுப்பு, வழக்கம்போல் இவ்வாண்டும் இனிது தொடங்கி நடைபெற இருக்கிறது.

## இறைவன் அருளின்றி எவையும் நடைபெறு :

சைவ சமயம் உணர்த்தும் பல கருத்துக்களில் குருவழிபாடு என்பது மிகவும் அடிப்படையானதும் முழுமையான பயனளிக்கக் கூடியதுமாகும். திருமூலர் அருளிய திருப்பாடலை இக்கருத்திற்கு ஒப்பச் சிந்திப்போம்.

“ தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே ”

என்ற இப்பாடல் குருவழிபாட்டால் ஏற்படும் பயன்களைக் கூறுகிறது. திருமூலர் அருளிய மற்றுமொருபாடல் குருவும் சிவனும் வேறுவேறு அல்லர் என்பதனைத் தெளிவாக விளக்குகிறது.

" குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே"

என்பது அப்பாடல். குருவையே சிவமெனக் கருதும் கொள்கை சைவ சமயத்தின் முக்கியக் கொள்கையாகும். உலகியலில் யாராவது ஓர் உதவிசெய்தாலும் அல்லது உபதேசம்செய்தாலும் அதனை அவர்களின் செயலாகவும் அவர்களின் கூற்றாகவும் கருதிவிடுவது இயற்கை. ஆனால் ஆண்டவனுடைய அருளின் துணையின்றி இவ்வுலகில் எதுவும் நடைபெறுவதில்லை. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பது ஆன்றோர் வாக்கு. ஆண்டவன் அவரவரின் வினைக்கேற்ப அளிக்கும் இன்பத் துன்பங்களை யாரேனும் ஒரு மனிதரின்வழியே அருளுகின்றான். கடவுள் மனிதவடிவிலேயே அருளுவர் என்பதனைத் "தெய்வம் மனுஷ்ய ரூபேண" என்று வடமொழியும் கூறுகின்றது. இதனை 'அதிஷ்டித்து நின்று செய்தல்' என்று கூறுவர். குருஞான சம்பந்தரும் இக்கருத்தில்தான்,

" அவரவருக் குள்ளபடி ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மானால் — அவரவரை
நல்லார் பொல் லாரென்று நாடுவதென்? நெஞ்சமே!
எல்லாம் சிவன்செயலென் றெண் "

என்று பாடியருளுகிறார். ஒலிபெருக்கி, தான் பேசாமல் பேசுவோரின் சொற்களை வாங்கிக்கொடுக்குமாறுபோல ஆண்டவனின் அருளைக் குருமூர்த்திகள் வாங்கி வழங்குகின்றார்கள். அரசாங்கத்தில் அரசு ஆணைகள் தாசில்தார் மூலமாகவும், தண்டல் அதிகாரி மூலமாகவும் செயல்படுவதுபோலவும், கல்வித்துறைச் செயல்கள் இயக்குநர், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாகச் செயல்படுவதுபோலவும் இதனைக்கொள்ளலாம். குரு வேறு சிவம் வேறு என்று பிரித்துப்பார்த்தல் கூடாது. அரசாங்கம்வேறு அதிகாரிவேறு என்று எங்ஙனம் பிரித்துப்பார்க்காமல் செயல்கள் நடைபெற்றுவருகின்றனவோ அதுபோல மானிடச்சட்டை தாங்கிய மகேசன் திருவுருவமே குருவுருவம் என்று எண்ணி வழிபடுதல் தக்கதும் பயனளிக்கக்கூடியதுமாகும்.

## பணிந்து பணிபுரிந்தால் பதவி தானேவரும்!

இத்தகைய உயர்ந்த குருவாகும் நிலையினை யாரும் தேடிச் செல்லுதல்கூடாது. தகுதிநோக்கித் தானேவரும். உயர்பதவியினைத் தகுதியில்லாதார் ஆசையினால் தாமே நாடிச் செல்கின்றனர். இக்குறை இன்று எல்லாத்துறைகளிலும் இருக்கின்றது. பொதுவாக

எந்தத்தகுதியான பதவிக்கும் யாரும் முன்வந்து போட்டிபோடுதல் கூடாது. பணிகளைப் பயன்கருதாதுசெய்யும் உள்ளமும் இடையறவு படாது செயலாற்றும் திறனும் ஒருவர் மேற்கொண்டு பணிசெய்து வந்தால் உரியவர்கள் இவற்றினை அறிந்து உயர்ந்த பதவியினைத் தாமே முன்வந்து அளிப்பார்கள். இராமாயணத்தில் இதற்கு ஓர் உதாரணம் உள்ளது.

சீதையைத்தேடும் நோக்கில் தெற்கு எல்லையில் தங்கியிருக்கும் அனுமன், ஜாம்பவான், அங்கதன் முதலானோர் சம்பாதியின் கூற்றால் கடலுக்கு அப்பாலுள்ள இலங்கையில்தான் சீதை உள்ளாள் என்பதனைத் தெரிந்துகொள்கிறார்கள். அவர்கள், வானரர்களுடன், யார் அங்கே சென்று சீதையைக் கண்டு வருவது என்று ஆலோசனை செய்கிறார்கள். அங்கதன், “நான் அங்கே போய்விடுவேன்; ஆனால் திரும்பிவருதல் இயலாது” என்று கூறுகின்றான். ஜாம்பவானும் வயது முதிர்வு, காலிலுள்ள ஊனம் இவை காரணமாகத் தன்னாலும் சென்றுவருதல் இயலாது என்று கூறிவிடுகின்றான். இவ்வளவுக்கும் ஒருவார்த்தையும் பேசாமல் நின்றுகொண்டிருந்த அனுமனைப்பார்த்த ஜாம்பவான் “அனுமனே சென்று கண்டுவரும் தகுதியுடையோன்” என்று அங்கதனிடம் கூறுகின்றான். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. அமைதியாக இருந்தால் அரியபதவியும் தேடிவரும். அப்பர்சுவாமிகள் கூறுவதுபோல ‘என்கடன்பணிசெய்துகிடப்பதே’ என்று உளம்கொண்டு தொண்டுசெய்துவருதலே தக்கது. கீதையும் இக்கருத்திலேதான் ‘உனக்குக் கர்மத்தைச் செய்யத்தான் அதிகாரம் உண்டு’ என்று கூறுகிறது. எனவே தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்துவந்தால் ஆண்டவனின் அருள் மனிதர்கள் மூலமாக வந்தடையும் என்பதும் குருமூர்த்திகள்போன்ற உயர்பதவியும் தகுதி நோக்கித் தானேவரவேண்டுமே ஒழிய விரும்புதல் ஆகாது என்பதும் புலப்படும்.

### குரு எனப்படுவார் :

குரு என்ற சொல்லுக்கு அறியாமையைப் போக்குபவர் என்பது பொருளாகும். ‘கு’ என்றால் அறியாமை; ‘ரு’ என்றால் போக்குபவர். உலகியல் அறிவாகிய கலைஞானத்தையும் உலகியலுக்கு அப்பாற்பட்ட அறிவாகிய மெய்ஞ்ஞானத்தையும் அறிந்தவரே குருவாகும் தகுதியுடையோராவர். அதனால்தான் ஞானசம்பந்தர் அருள் வரலாற்றில் அம்மையின் அமுத ஞானப்பாலை உண்டநிலையில் அவர் பெற்ற சிறப்பினைப் பாட வந்த சேக்கிழார்,

“சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்

உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்''

என்று பாடியருளுகின்றார். இதற்கு விளக்கம் காண வந்தவர்கள் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம் என்றும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்றும் பொருள் கண்டனர். சுருங்கக்கூறின் இதனைச் சிவனடியே சிந்திக்கும் கலைஞானம் எனவும் பவமதனை அறமாற்றும் மெய்ஞானம் எனவும் கொள்ளலாம். கலை ஞானம் சாதனமாயிருப்பது; மெய்ஞ்ஞானம் சாதனத்தின் பயனாய் இருப்பது. சாதனமாக இருக்கும் உலகியல் ஞானத்தையும் பயனாக இருக்கும் மெய்ஞ்ஞானத்தையும் உணர்ந்தவரே குரு எனப்படுவார்.

இப்பாடலில் சேக்கிழார் கலைஞானத்தை உவமையிலாதது என்றும், மெய்ஞ்ஞானத்தை உணர்தற்கரியது என்றும் குறித்திருப்பது அறிந்தின்புறத்தக்கது. ஆண்டவனை மாணிக்கவாசகர், ''உணர்ந் தார்க்கும் உணர்வரியோன்'' என்று திருக்கோவையாரில் குறிப் பதும் இங்கே நினைவுகூரத்தக்கது.

இங்ஙனம் குருவாகும் நிலையுடையோர் உலகியல்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் அறிந்திருத்தல் கடப்பாடு என்பதனை விளக் குவது போல, குருஞானசம்பந்தர் ஒருபாடல் அருளுகின்றார். குரு வாகும் தகுதியுடையோர் தன்னை அறிந்தவராகவும், தனக்கு முதல்வனாக உள்ள தலைவனை அறிந்தவராகவும் தளையாக உள்ள வினைகளை அறிந்தவராகவும் இருத்தல்வேண்டும். (தான் - பசு; தலைவன் - பதி; தளை - பாசம்) எனவே முப்பொருள் உண்மையை உணர்ந்தவராக இருத்தல்வேண்டும் இதனை எதிர்மறை முகத்தால்,

''தன்னை அறியார் தலைவன் தனை அறியார்
முன்னை வினையின் முடிபறியார் — பின்னைக்
குருக்களென்று பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
தெருக்கள் தனிலே சிலர்''

என்று அருளிச் செய்கின்றார். மேற்கண்ட தகுதியில்லாதோர் குருவா னால் நாட்டிற்குக்கெடுதல் என்னும் குறிப்பில் 'ஐயோ' என்று இரக்கம் கொள்ளுகின்றார்.

## அடிமையும் உடைமையும்:

மெய்கண்டாரும் தன்னை உணர்தலும் தலைவன்தனை உணர் தலும் சித்தாந்த சைவராதற்குள்ள தகுதிகள் என்னும் குறிப்பில்,

சிவஞானபோத அவையடக்கப் பாடலில், அடிமைப் பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து, தம்மை அடிமையாக உடைய தலைவன் தனை உணர்ந்த சிந்தாந்த சைவர்கள், தமக்கடிமைப் பொருளாகிய எம்மை ஆளாக உடையராதலின் இகழ்தல்செய்யமாட்டர்கள் என்று கூறுகின்றார்.

"தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மையுடைமை எமை இகழார்"

என்பன அப்பொருள் பொதிந்த வரிகளாகும்.

இப்பாடலில் 'தமை உடைய தன்னுணர்வார்' என்பதனைச் சிந்தித்தால் ஓர் உண்மை புலனாகும். உடைமை என்று கூறுவதெல்லாம் அறிவற்ற சடப்பொருள்களையே குறிக்கும், அடிமை என்று கூறுவதெல்லாம் அறிவுள்ள உயிர்ப் பொருள்களையே குறிக்கும். உடைமையும் அடிமையும் வேறுவேறான பொருள்தரும் சொற்கள். அதனால்தான் இங்குத் 'தம்மை அடிமையாக உடைய தலைவன்' என்று பொருள் கொள்ளுகின்றோம்.

## சைவமே முதற்சமயம் :

'தமையுடைய தன்னுணர்வார்' என்பதிலுள்ள 'தன்' என்னும் சொல் ஆண்டவனைக் குறிக்கிறது. வழக்கிலும்கூடத் 'தன்' என்னும் சொல் கடவுளைக் குறிக்கும்படியாகப் பயன்படுத்தி வருதலைக் காணலாம் 'தற்செயல்' எனும் சொல்லைப் பலரும் பலநேரத்தில் கையாண்டு வருகின்றனர். 'தற்செயலாக நடந்துவிட்டது' எனும் போது எதிர்பாராவிதமாக நடந்துவிட்டது என்ற பொருளில் தான் பயன்படுத்தி வருகின்றோம். 'தன்' என்பது கடவுளைக் குறிப்பது. தன் செயல் என்றால் கடவுளின் செயல் என்று பொருள்படுகிறது. 'தன் செயல்' இலக்கண விதிப்படித் 'தற்செயல்' என்றாகும். இச் சொல்லை இதே பொருளில் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றிப் பிறசமயத்தாரும் பயன்படுத்தி வருகின்றார்கள். இதனைக் காணும்பொழுது சைவ சமயம்தான் மிகப் பழங்காலந்தொட்டு வேரூன்றி நின்ற முதற்சமயம் என்பதும், அது பிற்காலத்தில் பலரால் பலகாரணங்களால் பலசமயங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது என்பதும் தெளிவாகும். எனினும் இதுபோன்ற சொற்கள் பயின்று வருவதைப் பிரிந்த பலசமயத்தவர்களும் மாற்றிக்கொள்ளாமல் அப்படியே கையாளுகின்றார்கள். இதுபோன்று இன்னும் பலசொற்கள் இருப்பனவற்றையும் உணரலாம். 'சிவனே' எனும் சொல் இன்று மிகவும் பழக்கத்தில் உள்ள சொல்லாகும். செயலின்றிக் கிடக்கும்

ஒருவனைப் பார்த்த பிறர் 'இவன் சிவனே' என்று இருக்கின்றான் என்று கூறுகின்றனர். மேலும் "சக்தி இருந்தால் செய்; இல்லையானால் சிவனே என்று இரு" என்றும் கூறுகின்றனர். இச்சொற்களும் சமயச் சார்பைக் கடந்த பிறசமயத்தாராலும் இப்பொருளில் பயன் படுத்தப்பெற்று வருவதைக் காணமுடிகின்றது சிவனையும் சக்தி யையும் சம்பந்தப்படுத்தியிருக்கும் இச்சொற்கள் எவ்வளவு ஆழமான பொருட்சிறப்புடையன என்பது அறிந்தவர்கட்கே விளங்கக்கூடியது.

இதுபோன்ற இன்னும் பல சொற்கள், பாமரர்களிடையேயும் அவர்களால் புரிந்துகொள்ளாமலேயே பழக்கத்தில் கையாளப்பட்டு வருவதைக் காணலாம்.

'அவன் ஆணவத்தால் தலைகால் புரியாமல் தடுமாறுகிறான்'

'அவன் கர்மாவை அவன் அனுபவிக்கிறான்'

'அவன் அவள் மாயையிலே மயங்கிக்கிடக்கிறான்'

என்று மும்மலத்தை உணர்த்தும் சொற்கள் கிராம மக்களால் புரிந்து கொள்ளாமலேயே பயன்படுத்தப்பட்டுவருவதைக் காணலாம். இங்ஙனம் இச்சொற்கள் அனுபவ வாக்கியங்களாகக் கிராமங்களில் கையாளப்பட்டுவருவதைக்காணும்பொழுது பரந்துபட்ட சைவசமயம் பண்டுதொட்டே வேரூன்றி நின்ற நிலையினை உணரமுடிகிறது.

## பற்றியிருந்தால் பற்றுவிடும் :

இங்ஙனம் பாத்தரப்பிலும் எங்கும் பரவியிருக்கும் சைவசமயம், ஆண்டவனையோ குருவையோ ஆராய்ந்து கண்டுபிடிக்க முயலாமல் நம்பிக்கையுடன் ஒருகடவுளை அல்லது ஒருகுருவை இளமையிலேயே பற்றிக்கொள் என்று கூறுகிறது. ஏகலைவனை உயர்த்தியது நம்பிக்கை தான். எல்லாவற்றையும் ஆராய்ந்து தெளிந்தபின் ஒரு கடவுளையோ ஒரு குருவையோ பற்றிக்கொள்வது என்பது இயலாததாகும். ஆத லின் முதலில் ஒருகடவுளை அல்லது ஒருகுருவைப் பெற்றோர்காட்டக் கண்டு பற்றிக்கொள். அவர்களின் அருளே உனக்குத் தெளிவையும் நல்வழியையும் காட்டும் என்பது முன்னோர்களின் முடிபு. இக்கருத்தில் தான் திருவள்ளுவரும்,

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்னும் குறளில் பிற பற்றுக்களை விடுவதற்குப் பற்றற்றவனாக இருக்கும் ஆண்டவனை முதற்கண் பற்றிக்கொள்வதே வழியாகும் என்று கூறுகின்றார்.

இந்நிலையினை இல்லற வாழ்க்கையிலும் வைத்துப்பார்க்கலாம். முற்காலத்தில் சிறுவயதிலேயே திருமணம் செய்து வைத்தார்கள். அது தவறு என்பார் சிலர்; ஆனால் அதுதான் சிறந்தது என்பதனை ஆழமாகச் சிந்தித்தால் உணரலாம். ஆணோ பெண்ணோ தனக்கு உரியதுணையை இளமையிலேயே பெற்றோர்களால் தேர்ந்துகொண்டு அதன்வழி வாழும்பொழுது புறத்திலே மனம்திரிய இடமில்லாமல் போகிறது. அத்துடன் இளமைக்காலம் தொடங்கி ஒருவரை ஒருவர் நேசிப்பதால் புரிந்துகொள்ளவும், பெரியோர் கொளுத்தியது கொண்டு கொண்டது விடாமை என்ற திறனும் உண்டாகிறது. பெண்கள் தங்கள் துணையை இளமையில் பற்றிக்கொள்வதால் ஏற்படும் சிறப்பைப்போலவே, பக்தனும் குருவையோ கடவுளையோ இளமை யிலேயே பற்றிக்கொள்வதால் பிற பற்றுக்கள் விடுபட்டுப் பேரின்பம் கிட்டும் என்பது உறுதி.

## முப்புரம் எரித்த மூர்த்தி :

இங்ஙனம் மனிதன் பற்றுக்கோடாகக்கொள்ளக்கூடிய ஆண்ட வன், மனிதனைப்போலல்லாமல் கருவி கரணங்களின் துணையில்லாம லேயே காரியங்கள் செய்யக்கூடிய சிறப்புடையவர், நினைவு மாத்தி ரத்திலேயே அருள்வதும் பிறவும் செய்யக்கூடிய ஆற்றலுடையவர். இந்தச்சிறப்பினை எடுத்துக்காட்டும் புராண நிகழ்ச்சிதான் திரிபுரம் எரித்த வரலாறு.

ஆண்டவன் திரிபுரம் எரிப்பதற்காகப் புறப்பட்ட பொழுது தேரின் உறுப்புக்களாக இருந்த தேவர்கள், தங்களின் உதவியின்றி இத்திரிபுரம் எரிக்கும் செயல் நடைபெறாது என்று தங்களுக்குள் எண்ணினர். இவ்வுள்ளக்குறிப்பினை எல்லாம் அறியும் ஆண்டவன் தம் திருவுள்ளத்தில் இவர்களின் நிலையினை எண்ணிச் சிரித்தார். அந்தச் சிரிப்பே தீயாகச் சென்று திரிபுரங்களை எரித்துவிட்டது; இதனால் ஆண்டவன் எச்செயலையும் கருவி கரணங்களின் துணை யின்றித் தான் நினைத்தமாத்திரத்திலேயே செய்யக்கூடியவர் என்பது பெறப்படும். இது சங்கற்பமாத்திரத்தில் நிகழ்ந்த செயலாகும். சூரியனின் சந்நிதியில் தாமரை தானே மலர்வதும், அல்லிமலர் கூம்புவதும், என்பிலா உயிர்கள் இளைத்துப்போவதும், என்புள்ள உயிர்கள் ஏற்றம்பெறுவதும் நடைபெறுவதுபோல ஆண்டவனின் சந்நிதியே அனைத்தையும் செய்யும், இது சந்நிதி மாத்திரத்தில் நிகழ்ந்த செயலாகும்.

## மூவகைநெறியில் முளைத்த நூல்கள்:

இத்தகைய கடவுளின் திருவடியை அடையத் தடையாக இருப்பவை ஆணவம், கன்மம், மாயைஎனும்பாசங்கள். பசுவாகிய ஆன்மா அப்பாசங்களின் நீங்கிப் பதியை அடைதலே முடிந்தபயன் ஆகும். இவ்வுண்மையினையே வேதம், ஆகமம், புராணம், இதிகாசங்கள், தோத்திரங்கள். சாத்திரங்கள் கூறுகின்றன. வேதம், ஆகமம் என்னும் இரண்டும் ஆண்டவனால் அருளிச்செய்யப் பெற்றவை. மற்றவை ஆண்டவனின் அருள்பெற்ற அடியார்களாலும் ஆசாரியர்களாலும் செய்யப்பெற்றவை.

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் பல்வேறு தரத்தில் இருப்பதால் அவரவர்களின் நிலைமைக்கேற்பக் கூறவேண்டும் என்பதனாலேயே முப்பொருளுண்மையினைப் பல்வேறு நூல்கள் பல்வேறு நிலையில் கூறுகின்றன. வேதம், ஆகமம் எனும் இரண்டும் எஜமானன் உத்தரவு போடுவது போன்று கூறும் இயல்புடையன. இதனை வடமொழியில் 'பிரபு சம்ஹிதை' என்பர். புராண இதிகாசங்களும் அறநூல்களும் நண்பன் கூறுவது போன்ற இயல்புடையன. இதனை வடமொழியில் 'சுஹ்ருத்சம்ஹிதை' என்று கூறுவர். காவியங்களும் இலக்கியங்களும் மனைவிகூறுவதுபோன்ற இயல்புடையன. இதனை 'காந்தாசம்ஹிதை' என்று வடமொழியில் கூறுவர்.

## நல்லன கற்று நாளும் வாழ்க:

இங்ஙனம் முன்னோர்கள் உயிர்கள்துன்பங்களினின்றுவிடுபட்டுப் பேரின்பம் அடைய, பல நூல்களைப் பலதரத்தில் ஆக்கித் துணைபுரிந்துள்ளனர். அவற்றினைக் கசடறக்கற்றலும் அவ்வழிநின்று உய்தலுமே இதுபோன்ற சமயப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதால் ஏற்படும் பயனாகும். இங்கு வந்துள்ள பயிற்சியாளர்களும் பிறரும் இந்நிலையினை மறவாது இக்குருபூஜை விழாப் பத்து நாட்களிலும் நல்லாசிரியரிடம் நல்லன பலவும் கற்று அதன்வழிநின்று, நலம்பலபெற்று நீடு வாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

**பண்பு வளர்க!**

**பக்தர்கள் வாழ்க !!**

# பாவம் பற்று

செந்தமிழ்ச்செல்வர்,

## திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

பழையகாலத்தில் அந்தணர்கள் வேதம் ஓதினார்கள். வேத விதிப்படி பல வேள்விகளைச் செய்தார்கள். ஒவ்வொருநாளும் தவறாமல் ஔபாசனமாகிய அக்கினிகாரியத்தைச் செய்தார்கள். உலகம் நன்கு வாழவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்துவந்தார்கள்.

பிராமணன் பிறந்தவுடனே வேதம் ஓதும் தகுதி பெறுவதில்லை. உபநயனம்செய்தபிறகே அந்தத்தகுதியைப்பெறுகிறான், உபநயனமே ஒரு தீட்சை. வேதம் ஓதுவதும் சமிதாதானம் செய்வதும் பிரமசாரி யின் கடமைகள், திருமணம் செய்துகொண்டபிறகு வேதம் ஓதுவதை விடுவதில்லை. அக்கினிகாரியத்தில் பிரமசாரி செய்வதுபோலச் சமிதாதானம் செய்யாமல் ஔபாஸனம் செய்வார்கள். அக்கினியின் வாயிலாகத் தேவர்களை உபாஸிப்பதே ஔபாஸனம்.

தில்லையில் வாழ்ந்த அந்தணர்கள் மூவாயிரவர்கள் தில்லை மூவாயிரவர் என்பது பெருவழக்கு, அவர்கள் நடராஜப்பெருமானைப் பூசிப்பதோடு அந்தணருக்குரிய பொதுவான செயல்களையும் செய்து வருவார்கள். வேதம் ஓதுதலும் எரி ஓம்புதலும் விடாமல் செய்யும் கடமைகள்.

### கற்று ஆங்கு எரி ஓம்பி

இவ்வாறு செய்வதனால் வறுமை, பிணி, பசி, பகை முதலிய துன்பங்கள் அணுகாமல் உலகத்தைக் காப்பாற்றுவார்கள். உலக நலத்தை எண்ணி அவற்றைச் செய்வதனால் யாவரும் அவர்களைப் போற்றினார்கள்.

கலி என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. எல்லாவகையான துன்பங்களையும் தீமைகளையும் கலி என்ற சொல்லுக்குப் பொருளாகச் சொல்லலாம். இப்படிப் பலபொருள்களைத்தருவதால், 'கலி கல்பதரு' என்ற வழக்கு வடமொழியில் ஏற்பட்டது. தில்லைவாழ் அந்தணர்கள்

வேதத்தைப் பயின்று அக்கினிகாரியம்செய்து கலியை வாராமலே ஓட்டி விடுவார்களாம்.

**கலியை வாராமே**
**செற்றார்.**

அத்தகைய அந்தணர்கள் தில்லையில் வாழ்கிறார்கள். தில்லை என்று சொன்னவுடன் எல்லோருக்குல் நடராசப்பெருமானும் தில்லை வாழந்தணர்களுமே நினைவுக்குவருவார்கள். மற்றமக்கள் இருந்தாலும் தில்லைக்குச் சிறப்புத்தருபவர்கள் அவர்களே. அதனால்தான் திருத்தொண்டத்தொகை 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்குகிறது. திருவாரூரில் எழுந்தருளிய தியாகராசப்பெருமானே அந்த அடியை எடுத்துக்கொடுத்தானாம். அடுத்தபடி தனியடியார்களைப்பாடும் பாடல்கள் அந்தப் பதிகத்தில் உள்ளன. தொகையடியார்களைக் கடைசியில் பாடுகிறார் சுந்தரர். ஆனால் எடுத்தவுடனே தில்லைவாழ் அந்தணர்களையே திருத்தொண்டத்தொகை பாடுகிறது. அத்தகைய பெருமை உடையவர்கள் அவர்கள். உலகத்தில் கலியின்கொடுமை நடைபெறாமல் செய்யும் செயல்களை அவர்கள் செய்துவந்தமையால் அந்தச் சிறப்பைப் பெற்றார்கள்.

**செற்றார் வாழ் தில்லை.**

அவர்கள் வாழும் தில்லையில் இறைவன் திருக்கோயில் நிலவுகிறது. அங்கே உள்ள திருச்சிற்றம்பலத்தில் நடராசப்பெருமான் எழுந்தருளியிருக்கிறான்.

**தில்லைச்**
**சிற்றம்பலம் மேய.**

அவன் தன் திருமுடியில் சந்திரனை அணிந்திருக்கிறான். வானத்தில் தோன்றும் சந்திரன் தேய்ந்தும் மாய்ந்தும் வளர்ந்தும் வருகிறான். இறைவன் அணிந்துள்ள சந்திரனோ என்றும் ஒரே நிலையில், முற்றா வெண் திங்களாக, பிறையாக இருக்கிறான். இறைவனை அடைந்தவர்கள் தம் நிலை மாறாமல் நிலைத்துநிற்பார்கள் என்பதற்கு அறிகுறியாக அந்தப்பிறை விளங்குகிறது. எல்லோருக்கும் முதல்வனாகிய இறைவனை அடைந்தபிறகு அதற்கு வேறு பாதுகாப்பு எதற்கு?

**முற்றா வெண்திங்கள் முதல்வன்.**

இறைவனை அடையாளம் கண்டுகொள்ள அந்தத் திங்கள் உதவுகிறது. மலையின்மேல் விளக்கு வைத்தால் நெடுந்தூரத்துக்குத் தெரிவதுபோல, அந்தத்திங்கள் நெடுந்தூரத்தில் உள்ள அடியார்களுக்கும் இறைவன் இருக்கும் இடத்தைக் காட்டும் சின்னமாக அமைந்திருக்கிறது.

அந்த முதல்வன் திருவடியை அடியார்கள் பற்றிக்கொள்வார்கள். சந்திரனைக்கொண்டு அவன் இருக்கும் இடத்தை அறிந்து அணுகியவர்கள் அந்தத்திங்களைப் பார்ப்பதில்லை தமக்குப் புகலிடமாக விளங்குவது இறைவன் திருவடியே என்பதை உணர்ந்தவர்கள் அவர்கள் ஆகவே அந்தத்திருவடியையே பற்றிக்கொண்டிருப்பார்கள். பற்றுவதாவது உடம்பினால் வணங்குவதுமட்டும் அன்று; மனத்தில் என்றும் நினைந்து வாழ்வதே பற்றிநிற்கும் பண்பு. இந்தவாழ்க்கையில் நாம் எது எதையோ பற்றிக்கொண்டும், யார் யாரையோ பற்றிக்கொண்டும் வாழ்கிறோம். அதனால் பெரும் பயன் ஏதும் உண்டாவதில்லை. பல பாவங்களைச்செய்து வாழ்கிறோம். அதனால் மீண்டும் பிறப்பு எடுக்க வழி உண்டாகிறது. ஆனால் இறைவன் திருவடியைப் பற்றிக்கொண்டவர்களைப் பாவங்கள் அணுகுவதில்லை. அவர்கள் எப்போதும் நற்செயல்களையே செய்வார்கள். ஆதலினால் தீய செயல்களால் உண்டாகும் பாவங்கள் அவர்களை அடைய வாய்ப்பு இல்லை. இறைவன் பாதத்தை உண்மையாகப் பற்றிக்கொண்டவர்கள் உயிர்களுக்கு நன்மையே செய்வார்களன்றித் தீங்குபுரிவதில்லை.

முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே.

'முதல்வனுடைய திருப்பாதங்களையே தம்முடைய பற்றுக்கோடாகக்கொண்டு, அந்தநிலையில் மாறாமல் நின்றவர்களைப் பாவங்கள் பற்று' என்றும் பொருள் கொள்ளலாம். பாதமே என்ற ஏகாரம் பிரிநிலை. வேறு எதனையும் பற்றிக்கொள்ளும் புணையாகக்கொள்ளாமல் இறைவன் திருவடிகளையே பற்றுகக்கொண்டு நின்றவர்கள் அவர்கள்.

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்"

என்று பாடுவார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இறைவன் திருமுடியில் உள்ள சந்திரனை அடையாளமாகக் கொண்டுசென்று, அந்தத் திருமுடியை நாடாமல் அவன் திருவடியையே பற்றிக்கொள்வது அடியார் இயல்பு. கோபுரத்தை நெடுந்தூரத்திலேகண்டு திருக்கோயிலை நோக்கிச் செல்பவர்கள் வெளியில் நின்று அந்தக்கோபுரத்தையே பார்த்துக்கொண்டு நிற்கமாட்டார்கள். திருக்கோயிலுக்குள் நுழைந்து இறைவனைத் தரிசிப்பார்கள். அப்படி இறைவனை இனம் கண்டுகொள்ளச் சந்திரன் உதவினாலும் அவனை அணுகினபிறகு, பணிவுடைய அடியவர்கள் அவனுடைய திருவடியையே பிடித்துநிற்பார்கள். கலங்கரை விளக்கம் கடல் துறையைக் காட்டுவதற்காக இருக்கிறது. கப்பல் ஓட்டுகிறவர்கள் அவ்விளக்கைப்

பார்த்துத் துறை இருக்குமிடம் தெரிந்து கப்பலைச் செலுத்துவார்கள். கப்பல் துறையை அடைந்தவுடன் கலங்கரை விளக்கத்தைப் பாராமல் இறங்குதுறையையே பார்ப்பார்கள். அவ்வண்ணமே கலங்கரை விளக்கம்போல ஒளிவீசும் வெண்திங்களை அடையாளமாகக் கொண்டு இறைவனை அடைந்தவர்கள் தாம் இறங்குதுறை இதுதான் என்று அவன் திருவடிகளைப் பற்றுவார்கள். அப்படிப் பற்றினவர்களைப் பாவங்கள் பற்றுவதில்லை.

கடலில் இருக்கும் வரைக்கும் புயற்காற்றின் பயமும் முதலைகளின் பயமும் திமிங்கலங்களின் பயமும் இருக்கும். கரையை அடைந்து விட்டால் அவர்களை அவை ஏதும் செய்யமுடியாது. அடியார்கள் அவ்வாறு பாவங்கள் தம்மைப் பற்றிக்கொள்ளாத நிலையிலிருப்பார்கள்.

**கற்றுஆங்கு எரிஓம்பிக் கலியை வாராமே**
**செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய**
**முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே**
**பற்றா நின்றாரைப் பற்றா பாவமே**

வேதங்களைக்கற்று தாம் கற்றபடியே அக்கினிகாரியங்களைச் செய்து கலியை நாட்டில் வராமல் ஓட்டினவர்களாகிய மூவாயிரம் அந்தணர்கள் வாழும் தில்லைமாநகரில் உள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ளவனும், பூர்ணசந்திரனாகாமல் பிறையாக உள்ள வெண்மையான திங்களைத் தன் திருமுடியில் சூடிய ஆதி மூர்த்தியும் ஆகிய இறைவன் திருவடிகளையேபற்றி அந்தநிலையினின்றுமாறாமல் நிலைத்து நின்ற அடியார்களைப் பாவங்கள் பற்றா.

[ கற்று என்பது பொதுவாகக் கல்வியைப் பயின்று என்று பொருள் தருவதாயினும் இங்கே இடத்துக்கு ஏற்றபடி வேதங்களைப் பயின்று என்று கொள்ளவேண்டும். ஆங்கு - கற்றபடி; வேதங்களிலே சொல்லியபடி. எரி ஓம்பி - அக்கினிகாரியங்களைச் செய்து வேள்வித்தீயைப் பாதுகாத்து. கலி - தீமைகள். செற்றார் - மாய்த்தவர்கள். தில்லை: ஊரின் பெயர். மேய - விரும்பி நித்தியவாசம் செய்யும்; மேவிய என்பது மேய என நின்றது. முற்றாவெண் திங்கள்; முற்றிய திங்களில் சிறிது மறு உண்டு; பிறையில் அது இல்லை; முழுமையும் வெண்மையாக இருக்கும். பற்றா நின்றாரை - பற்றி அந்நிலையினின்றும் மாறாமல் நின்றவர்களை பாவம் பற்றா. இறைவன் திருவடியை அடையாதவர்களைப் பாவங்கள் பற்றும் என்பது இதனாற் பெறப்பட்டது. ]

முதல் திருமுறையில் கோயில் திருப்பதிகத்தில்வரும் முதற் பாட்டு இது.

# குழப்பமும் தெளிவும்

முத்தமிழ்க்காவலர்,

டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

[ தருமையாதீன முதற்குரவர் குருபூஜைவிழா ஒன்பதாம் திருநாளில் ( 3—6—80 ) திருமுறைப் பேரவைத் தொடக்கத்தில் நிகழ்த்திய சிறப்புரை.]

தருமையாதீனத்தின் தலைவர் அவர்கள் திருவடிகளை வணங்கி, பெருமக்களாகிய உங்கள் முன்பு பேசவிருக்கும்பேறு எனக்குக் கிடைத்துள்ளது. தமிழகம் முழுவதிலிருந்தும் வந்துள்ள சான்றோர்களாகிய உங்கள் முன்னிலையில், தருமையாதீனத்தின் முதற்குரவர் பெரும் திருவிழா பத்துநாட்களாகநடைபெறுகிறது. இன்று ஒன்பதாம் நாள் விழா. இன்றுமுதல் திருஞானசம்பந்தர் திருமுறைப் பெருவிழா கொண்டாடுவது இன்னும் கொஞ்சம் சிறப்புள்ளது. இந்தப் பெருவிழாவில் பங்குகொள்ளும்பேறு ஏறத்தாழ எண்பதுமைல்களுக்கு அப்பாலுள்ள எனக்கும் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி. அதைவிடப் பெருமகிழ்ச்சி, மகாசந்நிதானத்தின் திருமுன்பு அவர்களுடைய ஆசிபெற்றுப் பேசுவது. இதை எண்ணும்போது அதிக மகிழ்ச்சி உண்டாகிறது. எல்லாவற்றையும்விட என் உள்ளம் அடைகின்ற மகிழ்ச்சி என் வாழ்நாளிலேயே இதுதான் முதல் தடவை. இதுவே நான்பெற்ற பெரும்பேறு என்று கருதுகின்றேன்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் பலமுறை சிந்தித்துச் சிந்தித்து உளம் வருந்தியவைகளுள் ஒன்று, இன்று நடைபெறுவதாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். தமிழகத்திலே ஒரு அமைப்பு இல்லை என்று வருந்தியவன் நான். 1930 ல் சிங்கப்பூரில் உள்ள ஒரு தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் 'என்ன சொல்லுகிறீர்கள்? தமிழைப்பற்றி, தமிழ்மக்களைப்பற்றி, தமிழகத்தைப் பற்றி, சமயத்தைப்பற்றி" என்று கேட்டார். நான் ஒன்று சொன்னேன்; அவரும் வருத்தப்பட்டார். தமிழுக்கென்று ஒரு அமைப்பு இல்லை; தமிழகத்துக்கென்று ஓர் அமைப்பு இல்லை; தமிழனுக்கென்று ஓர் அமைப்பு இல்லை. தமிழ்ச்சமயத்துக்கென்று ஓர் அமைப்பு இல்லை; இந்த அமைப்பு தோன்றும்காலம்தான் தமிழகம் முன்னேறுகின்ற காலம் என்றேன். இப்பொழுது சரியாக ஐம்பது ஆண்டுகளாகப் பல இடங்களில் சொல்லியும், பேசியும் பலனில்லை. அது

இன்றைக்குத் தருமையாதீனத்திலே மகாசந்நிதானத்தின் திருவுளத்திலே ஏற்பட்டுள்ளது. இந்த அமைப்பு உண்டாகின்ற இந்நாளில் பேசுகின்ற பேச்சு எனக்குக் கிடைத்தது குறித்துப் பெருமகிழ்ச்சி. இது நான் பெற்றபேறு.

தலைப்பு இல்லாமல் பேசுகின்ற மரபு என்னிடம் இல்லை. இன்று நான் பேசுகின்ற பேச்சுக்குத் தலைப்பு 'குழப்பமும் தெளிவும்'. பேசுகின்ற நேரம் சரியாக அறுபது மணித்துளிகள். பேசுவதன் நோக்கம் குழப்பத்துக்குரிய காரணங்கள் என்ன என்னஎன்று பெருமக்களாகிய உங்கள் முன் வைப்பது. தெளிந்து செயல்படவேண்டிய பணிகள் என்னைப் பொறுத்தது அல்ல. உங்களுக்கே தோன்றவேண்டும். என் உள்ளத்திலே உள்ள எண்ணங்களையெல்லாம் உங்கள்முன் கொட்டி, உங்களைக் குழப்பத்திலிருந்து தெளிவுபெற, உங்களிடமிருந்து வடிகால் நான் தேட ஆசைப்படுகின்றேன். என்னுடைய பணி சிந்தனையைத் தூண்டுவது. உயர்ந்த நிலத்திலே சிறந்த விதைகளை விதைக்கவேண்டுமென்பது சான்றோர்வாக்கு. அப்படிப்பட்ட வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்துள்ளது. புலவர்களையும், பேரறிஞர்களையும், பெருமக்களையும், சான்றோர்களையும், செயல் திறம் பெற்ற வீரர்களையும், இளைஞர்களையும், தாய்மார்களையும் பார்த்து உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. ஆக இன்று உங்கள்முன்னே கொட்டுகின்ற இந்தச் சொற்கள் வீணாகாது என்று நான் கருதுகிறேன்.

செல்வம் பதினாறு என்று தமிழ்மறை கூறியிருக்கிறது. அபிராமி பட்டர்கூட பதினாறு பேறுகளையும் வகுத்துக் கூறியுள்ளார். சிலபேர் ஒன்றிரண்டு மாற்றிக் கூறியுள்ளனர். இப்பதினாறு பேறுகள் மாடு, மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாகனம், வலிமை, பொருள், போகம், புகழ் என்பன. எனக்கு ஒருகுறை. இந்தப்பதினாறில் சிந்தனைஒன்றைச் சேர்க்காமல் விட்டார்களே என்பதுதான். மிகப்பெரும் செல்வம் சிந்தனை. அதை இழந்தவன் ஒன்றிரண்டுஅல்ல; பதினாறு பேறுகளையும் இழந்துவிட்டவன் ஆவான். அச்சிந்தனைச் செல்வத்தை நாம் பெற்றால் நமக்கு அநேக உண்மைகள் புரியும். இப்போது ஒரு சிந்தனையைக் கூறுகிறேன்.

உலகில் சமயங்கள் மிகப்பல. அவற்றுள் மிகப்பெரிய சமயங்கள் ஒன்பது என்று சமய ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்த ஒன்பதில் ஏழு நாம் வாழுகின்ற - கால்மிதிபடுகின்ற மண்ணிலே - நம்நாட்டிலே தோன்றியவை. அவை இந்துமதம், சமணமதம், புத்தமதம், இஸ்லாம்மதம், கிறிஸ்தவமதம், பார்சியம், சைவம், வைணவம், சன்மார்க்கம் ஆகியனவாகும். உலகில் உள்ள மிகப்பெரிய மதங்களில் மூன்று தமிழ்நாட்டில் தோன்றின. அவை சைவமும், வைணவமும், சன்மார்க்கமும் ஆகும். உலகத்தில் தோன்றிய அவதார

புருஷர்கள் ஞானிகள், வேதங்கள், மதங்கள் யாவும் தோன்றியது நம் மண்ணிலே ஆகும். ஆசியா கண்டத்திலேயே, மூன்றைத் தோற்றுவித்த பெருமைபெற்றநாடு நம்நாடு. அதைநினைக்கும்போது சான்றோர்கள், ஞானம்பிறந்த கண்டம் என்று நெஞ்சு நிமிர்ந்து சொல்வார்கள். மற்ற கண்டங்கள் எல்லாம் உப்புக்கண்டங்களாகப் போய்விட்டன.

விஞ்ஞானமும், மெய்ஞானமும் இன்று போட்டி போட்டுக் கொள்கின்றன. விஞ்ஞானம் இவ்வுலகத்திற்குத்தேவை. மெய்ஞானம் மறுவுலகத்திற்குத்தேவை. விஞ்ஞானக் கருவிகளை இந்தியா வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறது; மெய்ஞானத்துக்கு வேண்டியதை உலகமுழுவதும் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. இதை எண்ணிப் பெருமைப்பட நமக்குத்தான் இவ்விதம்வேண்டும். மற்றக் கண்டங்களில் ஞானத்திற்கு உணவு வேண்டுமானால் இங்கிருந்து தான் தரவேண்டும். இதனால் இந்தியாவிற்குத்தான் பெருமை. மிகப்பழமையான நாடு, மிகத் தொன்மையானநாடு, மக்கள் முதன் முதலில் தோன்றியநாடு. முதலில் மொழிபேசியநாடு இவையெல்லாம் நமக்குச் சிறப்பு. இப்படிப்பட்ட தமிழ்நாட்டில் மக்கள் எண்ணிக்கை ஆறுகோடி. இங்கு ஐந்துகோடியும் வெளிநாட்டில் ஒருகோடியும் உள்ளனர். அரேபியாவில் மக்கள் எண்ணிக்கை ஆறுகோடி. இந்த ஆறுகோடி மக்கள் உள்ளநாடு மொத்தம் உலகில் இருபத்துமூன்று. ஐக்கிய நாட்டுச் சபையில் இருபத்திரண்டு நாற்காலிகள். அவரவர்களின் வர்த்தகம், வாழும்முறை, மொழி, சமயம், தொழில், மக்கள் பற்றிப் பேசுவதற்குக் கிடைத்துள்ளன. அவர்களைப்போல் சமமான மக்கள் எண்ணிக்கையிருந்தும் தமிழ்நாட்டுக்கு ஒரு நாற்காலிகூட இல்லை. நம்நாட்டுக்குப் பொதுவாக ஒரேஒரு நாற்காலி நாடு, மொழி, சமயம், வர்த்தகம் பற்றிப் பேசுவதற்கு இல்லை. இது சிந்திக்கக்கூடிய ஒன்று. தமிழும் சைவமும் தழைத்து ஓங்கவேண்டும்என்று சொல்லிக் கொண்டேயுள்ளோம். 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்று வாழ்த்திக்கொண்டே இருக்கின்றோம். வளர வேண்டுமென்று சொல்வதிலேயே வளராமல் இருப்பதும், விளங்குக என்பதால் விளங்காமல் இருப்பதும் நோக்கிநிற்கிறது.

தமிழ் நாட்டுக்கு என்று ஒரு வரலாறு இல்லை. தமிழ்மக்கட்கு என்று ஒரு வரலாறு இல்லை. தமிழ் இலக்கியத்துக்கென்று ஒரு வரலாறு இல்லை. தமிழ்ப்புலவனுக்கு என்று ஒரு வரலாறு இல்லை. ஏன்? குழப்பந்தான். சிந்திக்கவேண்டும். இதற்கு விடை நான் கூறமுடியாது.

தமிழ் மக்கட்கு ஓர் தொடர் ஆண்டே இல்லை. எல்லாம் 60 ஆண்டு பல்சக்கரமே திரும்பி வருகின்றது. கிறிஸ்தவர்க்கு இயேசுவை வைத்து, இஸ்லாமியர்க்கு நபியைவைத்து, புத்தருக்குப்

புத்தரை வைத்து, சமணர்க்குத் தீர்த்தங்கரரைவைத்து, ஆண்டுகள் கணக்கிடப்படுகின்றன. மலையாளிகட்குக்கூட ஆண்டு உண்டு; கொல்லம் ஆண்டு. தமிழனுக்குமட்டுமில்லை ஏன்? கல் தோன்றி மண் தோன்றாக்காலத்திற்கு முன்பே தோன்றியதால். இரண்டாவது குலோத்துங்கன் கல்வெட்டைப்பார்த்தால், குலோத்துங்கன் ஆண்டு 12ஆம் ஆண்டு என்று எழுதியிருக்கிறது. கரிகாலன் ஆண்டு 48. இப்படித் தமிழ்மக்கட்கு ஒரு தொடர் ஆண்டு இருந்திருந்தால் எளிதாக நாட்டுவரலாறு, மொழிவரலாறு, இலக்கிய வரலாறு இருந்திருக்கமுடியும். அதற்கு வேலைசெய்ய முடியுமா என்று ஐம்பத்தைந்து ஆண்டுகட்குமுன் குழப்பம் வந்தது. சிந்தனை தோன்றியது. அதன் பின் தெளிவு பிறந்தது. 1976லே பச்சையப்பன் கல்லூரியில் அன்றைக்குஇருந்தபுலவர்பெருமக்கள் ஏழுபேர்கூடிச்சிந்தித்தார்கள். பிடித்தாலும் புளியங்கொம்பாகப் பிடிக்கவேண்டுமென்று திருவள்ளுவரைப் பிடித்தார்கள்.

ஏழுபேரையும் கேட்டார்கள். ஒருத்தர் சொன்னது இன்னொருத்தர் சொல்லவில்லை. ஏழுபேரும் ஏழுவிதமாகக் கூறினர். நான் திருவள்ளுவர் தொடர் ஆண்டு 1956லிருந்து என்று வைத்துக் கொள்ளலாம் என்றேன். மற்றவர் எப்படி ஐயா என்று கேட்டபோது எவன் மறுக்கப்போகிறான் என்று ஒரு அடி அடித்தேன். இப்பொழுது அரசாங்கம் பின்பற்றுகிறது. திருமணப்பத்திரிகையில் போடுகிறார்கள். நாம் செய்த தவற்றை நம் கீழ் உள்ளவர்கள் செய்யாமல் எழுத்தில், பேச்சில் திருவள்ளுவராண்டைக் குறிக்கவேண்டும். பிற்காலத்தில் ஓர் தொடர் ஆண்டு இருக்கும். பிற்காலத்திலிருந்தாவது வரலாறு இருக்கும். சைவமும் தமிழும் தழைத்து ஓங்கவேண்டிய இந் நாட்டு நிலை எப்படிஇருந்ததுஎன்பது உங்கள் சிந்தனைக்கு விடப்பட்டுள்ளது. உண்மை, நேர்மை, ஒழுக்கம், பண்பாடு, நம்பிக்கை, நாணயம், ஈகை, இரக்கம், கொடை இத்தனையும் விளைந்த ஞானபூமி தமிழகம். இவை அத்தனையும் கூனி, குறுகி, கருகி பட்டுப்போய்விட்டது. நிலத்தைப் பார்த்து அழலாமென்றால் பயமாஇருக்கிறது. ஏன்? பொய், பித்தலாட்டம், கலப்படம், வஞ்சனை, லஞ்சம் இவற்றுக்கு மத்தியில் வாடுகின்றோம். ஏன்? எதனால்? சிந்திக்கவேண்டும். இப்படியே போக விடலாமா? போகவிட்டால் என்ன ஆகும். இதைத் திருத்தலாமா? திருத்துவது யார்? எப்படி? யாரைத் திருத்துவது? சிந்திக்கவேண்டும். ஒரு விஷக்கிருமிமாதிரி நச்சுப்பூச்சிபோலத் தமிழ்நாட்டில் இப்போது L. K. G, U. K. G பரவியிருக்கிறது. பிஞ்சு உள்ளத்திலே மொழியை மாற்றி, உடையை மாற்றி, உள்ளத்தை மாற்றி, பண்பாட்டை மாற்றி உறக்கத்தைமாற்றி, ஒழுக்கத்தைமாற்றி இப்படி இன்னும் 20ஆண்டுகட்குப் பிறகு இக்குழந்தைகள் வளர்ந்து பக்குவப்பட்டு வயதுக்கு வரும்போது இந்நாட்டின் நிலை எப்படி இருக்குமென்று பெருமக்களாகிய நீங்கள் சிந்திக்கவேண்டும். என்ன ஆகும்?

எங்கள் கிராமத்தான் முருங்கப்பேட்டையிலுள்ள ஒரு குளத்தைப் பார்த்து, பம்பாய் சென்றபின் சமுத்திரத்தைப் பார்த்து, முருங்கப்பேட்டையிலிருந்து இவ்வளவு பெரியகுளம் இங்கு எங்கே வந்தது என்று நினைத்தான் ஒரு மூன்றுவயது குழந்தை ஓடியாடி விளையாடுவது கண்டு நடுங்கினான் என்னய்யா இந்தப் பையன் இப்படிஓடுகிறான். நீபேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிறாயேஎன்றான். அந்த ஆள் அவன் பையன் அல்ல, பெண் என்றான். அப்படியா? அந்தப்பையனோட தகப்பனாரா? என்றதற்கு. நான் அப்பா இல்லை, அம்மா என்றான். ஆணா பெண்ணா என்பதுகூடத் தெரியாமல், இப்படி இருந்தால் தமிழகத்தின் எதிர்காலம் என்னவாகும்? மிகப் பழைய இலக்கியங்களில்உள்ள காதல், வீரம் எல்லாம் செத்துப்போகும். ஆணைப்பார்த்து ஆண் காதலிக்கின்றநிலைவரும். தடுக்கலாமா ? தடுப்பது யார்? இதெல்லாம் சிந்தித்தால் ஓர் அமைப்புவேண்டும்.

ஆந்திரமகாசபை ஆந்திராவுக்கு, கேரளமகாசபை கேரளத்திற்கு, கன்னடமகாசபை கன்னடத்திற்கு. அமைப்பு உள்ளது தமிழ் நாட்டுக்கு என்ன இருக்கிறது? கிறித்துவம், இஸ்லாம், சமணம் இம்மதங்களுக்கு என்று தனித்தனி அமைப்பு உள்ளது. சைவமதத்திற்கு என்று ஓர் அமைப்பு உள்ளதா? இல்லையே! எல்லாவற்றிற்கும் ஓர் அமைப்பு உண்டு. இதற்குமட்டும் இல்லையென்று சொல்லும் போது என் உள்ளத்தில் இரக்கம் ஏற்படுகிது. மத்தியமந்திரிசபையில் உள்துறை மந்திரியாயிருக்கும் ஒருவர் கூறுகிறார்:- 200க்குமேற்பட்ட சமஸ்கிருதபுத்தகங்கள் ரஷ்யன் மொழியிலும், ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்க்கப்படவில்லை என்று. இதற்கு வருந்துகிறேன். 7500 சமஸ்கிருதநூல்களில் 7300 ரஷ்ய மொழியிலும், ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இன்னும் 200 மொழிபெயர்க்கப் படவில்லை என்று வருந்துகிறார். தமிழ் இலக்கியங்களில் இன்னும் பல்லாயிரம் நூல்கள் உள்ளன ஒன்றும் மொழிபெயர்க்கப்படவில்லை. மொழி, சமயம், நாடு ஒன்றுக்கும் அமைப்பு இல்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று திருமூலர்காலத்திலிருந்து 3000 ஆண்டுகளாக இந்து மதத்தைச் சைவம்தான் என்கிறோம் இந்துமதம்வேறு? சைவம் வேறு? தமிழனின் சமயம் வேறு? சோமசுந்தர பாரதியார் கோயம்புத்தூரில் பேசும்போது சைவத்திலிருந்து தமிழைப்பிரித்தால் சைவம் செத்துவிடும் என்றார். சொல்லி 55 ஆண்டு ஆகிவிட்டது.

எனக்குக் கோபம்வந்துவிட்டது. தமிழன்வேறு, ஆரியன்வேறு, இரண்டும் கலந்து பின்னப்பட்டதுதான் சைவம். சைவம் என்பதே தமிழ்ச்சொல் இல்லையென்றார். யார் சைவர் என்பது விவகாரம், மரக்கறி உண்பவர் சைவரா? சைவ சமயத்தைச் சார்ந்தவர் சைவரா? சைவசாதியில் பிறந்ததால் சைவரா ? யார் சைவர் என்பதே குழப்பம்.

மடங்கள் பல உள்ளன? இந்துமடம், கௌமாரமடம், வீரசைவ மடம். சைவமடத்தில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் இப்படி மூன்று உண்டு. ஒன்றுக்கொன்று வேற்றுமை உள்ளது. உடையிலிருந்து திருநீறணியும்வரை உள்ளது. எல்லாவற்றையும்விட புண்பட்ட மனத்தோடு ஒன்று சொல்கிறேன். காஞ்சி காமகோடி பீடாதிபதி பிராமணர்களிள் இல்லத்திலும் உள்ளத்திலும் இடம்பெற்றுள்ளார். அந்த அளவில் நம் ஆதீனம் குருமகாசந்நிதானத்தின் பெருமை இல்லத்திலும் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ளதா? சொல்லுங்கள். இதைச் சிந்திக்கவேண்டும். சமயத் தலைவர்களை நாம் போற்றுவதில்லை. அவர்களுடைய தொண்டுகளை எழுதுவதில்லை. எடுத்துச்சொல்வதில்லை. காரணம் என்ன? குழப்பம் வருகின்றது. ஓர் அமைப்புவேண்டும். ஆதீனங்கள் சைவமக்களின் உள்ளத்தில் குடியிருக்கவேண்டும். வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தரைப் பார்க்கச்சென்றிருந்தபோது கொஞ்சம் இருங்கள் என்று சொல்லிப் பண்டிதரை அழைத்துவா என்றார். ஒரு 150 அடி இருக்கலாம். வாசற்படியில் கால்வைத்துவருகிறவரையில் எழுந்து நின்று மரியாதை செலுத்திக்கொண்டிருந்தார். இந்தமாதிரி காட்சி தமிழகத்தில் காணமுடியுமா? இந்தநிலை தமிழகத்தில் உண்டாகாததற்குக் காரணம் என்ன? தமிழ்ப்புலவர்களுக்கு அத்தகைய மதிப்பு கிடைக்குமா? இதை எண்ணும்போது குழப்பந்தான் வருகின்றது. மலையாளத்தில் உள்ள தமிழ் ஆசிரியர்கள் புலவர்கள் அங்கு நடக்கும் திருமணத்திற்குச்சென்று நல்வாழ்த்துக்கூறல், துக்கத்திற்குச்சென்று ஆறுதல் கூறிவருதல் என்ற ஒருமுறை வைத்துள்ளனர். அதனுல் வீதியில் அவர்கள் வந்துசென்றபின் அவர்களது கால்பட்ட மண்ணை தாய்மார்கள் எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொள்கின்றனர். இந்த மாதிரியான ஒரு மதிப்பு தமிழ்மக்களின் உள்ளத்திலும், இல்லத்திலும் வரவேண்டாமா? வேண்டும். எவ்வாறு?

நம்மைச் சுற்றியுள்ள மக்களைப் பார்த்து - அவர்கள் வைத்துள்ள சமய அமைப்பினைப் பார்த்து நாமும் அமைப்பு ஏற்படுத்தி வாழ வேண்டும். தமிழுக்கு என்று ஓர் அமைப்பு, தமிழனுக்கு என்று ஓர் அமைப்பு, தமிழ்ச் சமயத்திற்கு என்று ஓர் அமைப்பு தோன்றுதவரை பலனில்லை. இதற்குப் பெருமக்களாகிய நீங்கள்தாம் வழிகாண வேண்டும். தனி மனிதனுல் செய்ய முடியாததால் ஓர் அமைப்பு வேண்டும். அமைப்பு என்று ஒன்று இருந்தால்தான் அரசாங்கத்திடமோ, மக்களிடத்திலோ, செல்வாக்குப் பெறுவதிலோ, சமயத்தைப் பரப்புவதிலோ பயன் ஏற்படும். கிறித்துவ மதத்திலே தலைவரைக் கேளாமல் ஒருகாரியம் நடக்காது பிராமணர்கள் தம் திருமணப் பத்திரிக்கையில் இறைவன் பகவத் கடாட்சத்தாலும். காஞ்சி காமகோடி ஆச்சாரியர்களின் கிருபையாலும் திருமணம்

நிச்சயிக்கப்பட்டுள்ளது எனப் போடுகின்றனர். சைவர்கள் தம் திருமணப் பத்திரிக்கையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அருள் பெற்றுத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது என்று போடுகின்றனரா? இல்லை, ஏன்? ஓர் அமைப்பு இல்லை. தலைமையில்லை, 50 கோடி மக்களிடையே 50 கோடி அமைப்பாக உள்ளது. ஒவ்வொரு வீடும் ஓர் அமைப்பாக வுள்ளது. எப்படியாது அடுத்தவனை அடக்கி ஆள வேண்டும் என்பதுதான் எண்ணம். இப்படித்தான் வாழவேண்டு மென்றநிலை தோன்றிய நாட்டில் ஏன் இந்தநிலை. சிந்திக்கவேண்டிய ஒன்று, இதற்கெல்லாம் காரணம் ஓர் அமைப்பு இல்லாததால், நமது சமயத்தைச் சரியாக வளர்க்காததால், சமயக் கோட்பாடுகளைச் சரிவரப் பின்பற்றாததால்தான் இத்தகைய குறை ஏற்படக் காரணம் என்று என் உள்ளம் சொல்லுகின்றது. சான்றோர்கள் உள்ளமும் சரியென்றுநம்பினால் இப்படியே போகவிடலாமா? தடுக்கலாமா? தடுப்பது எப்படி? யார் தடுப்பது என்றுசிந்தித்தால் இந்தக்குழப்பத்தி லிருந்து தெளிவுவரும். அந்தத்தெளிவால் ஓர் அமைப்பு, ஸ்தாபனம் தேவை என்ற எண்ணம் வரும்.

பல்லாயிரக்கணக்கான கோயில்கள் உள்ளன. பெருங்கோயில் களோ 11000. கும்பாபிஷேகம்பண்ணும் கோயில்களில் மூங்கில் சாரம் கட்ட செலவு 2 லட்சம், கோயில் உட்புறம் வண்ணம்பூச, கோபுரம் கட்ட எத்தனை கோடியாகும். இந்தப் புள்ளி விவரத்தை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட திருக்கோயில்களில் சைவர்கள் குறைவாக இருப்பதுஏன்? ஐயர்வந்துபாடுவார்: பண்டாரம் வந்து மணி அடிப்பார், சமய வளர்ச்சி உள்ளத்தில் இல்லை, இதைச் சிந்திக்கவேண்டாமா? இன்னொருகொடுமை. உங்கள் உள்ளத்தைப் புண்படுத்த வரவில்லை, இதை நினைத்துப் பார்த்தால் உங்களுக்குத் தூக்கம்வராது அவ்வளவு பெரிய கொடுமை உள்ளது. இத்தனை பெரிய கோயில்கள்; ஆனால் நம் தமிழன் ஆந்திராவிற்கும், கேரளத் திற்கும் போகிறான். இத்தனை சாமிகளுக்கும் தங்கள் குறையைப் போக்க ஆற்றல் இல்லை என்று நம்புகிறானா? திருப்பதிக்குப்போய் காசுமாலை போடுகிறான், ஐயப்பசாமி தரிசனத்திற்குச் செல்கிறான். நம்பிக்கை இல்லாதது ஏன்? ஒருவன் தன் நிலத்தை விற்றுக் கல்யாணம் கருமாதி பண்ணிவிட்டு கடன் வாங்கித் திருப்பதிக்கும், சாஸ்தாவிடமும் செல்கின்றான். தமிழகம் வறுமையில் இருக்கிறது, இப்படிப் போக விடலாமா? போனால் சைவமும் தமிழும் என்ன ஆகும்? சிந்திக்கவேண்டும். இதைத் தடுக்கவேண்டும்.

தமிழில் சொந்தச்சொற்கள் 86200. இவை அனைத்தும் பொருள் அமைதியுடையது எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே.

உலகத்தில் பேசப்படும் 2207 மொழிகளில் எந்த மொழிக்கும் இவ்வளவு சொற்கள் கிடையாது. ஆங்கிலத்திற்குக்கூட கிடையாது' மூன்றெழுத்து, இரண்டெழுத்து சொற்களாலேயே நம் திருக்குறள் பண்ணப்பட்டுள்ளது. இவ்வளவு சிறந்த மொழி. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கவேண்டும். மேன்மைகொள் சைவநெறி உயர வேண்டும் என்பது எண்ணங்கள், செயலில் கடுகளவுகூட இல்லை. இவ்வளவு சிறந்த மொழியை வைத்துக்கொண்டு - சிறந்த இலக்கணம் தொல்காப்பியத்தை வைத்துக் கொண்டு, சித்தாந்தம் என்ற வட சொல்லைச் சொல்கிறோம். இதைத் தமிழில் மொழி பெயர்த்தால் முடிந்தமுடிவு எனப்படும். சிவஞானபோதம் புகை நுழையமுடியாத இடங்களிலெல்லாம் நுழைந்து பொருள் கொள்ளக்கூடியது. சித்தத்தின் அந்தம் முடிவு என்று பொருள். உலகில் எந்த ஞானியும் சொல்ல முடியாத கருத்துக்கள் இதில் உள்ளன. உலகத்தில் எந்த மொழியிலும், எந்தச்சமயத்திலும், எந்த நாட்டிலும் இல்லாத ஒன்றை நாம் வைத்துள்ளோம். இதை உலகத்துக்கு எடுத்துக்காட்டினோமா?

இவ்வளவு பெரிய சிறப்பை வைத்துக்கொண்டு உலகத்துக்குக் காட்டாமல் இருக்கிறோம். முதன் முதலில் மொழிக்கு இலக்கணம் கண்டவர் தொல்காப்பியர். உலகத்தை, மக்களுடைய வாழ்வை எண்ணி அறுதியிட்டு, அழகுபடுத்தி, ஏன்? கண்ணால் காணப்படும் பொருள்களுக்கெல்லாம் இலக்கணம், மனத்தால் நினைக்கப்படும் பொருள்களுக்கு இலக்கணம், அகம், புறம் என்று கண்டார் தொல்காப்பியர். இதைப் பார்த்து காப்பி அடிக்கக்கூட வடமொழியிலும், மேல்நாட்டிலும் சிறந்த புலவர்கள் இல்லை இப்படிப்பட்ட செல்வங்களை வெளியுலகுக்குக் காட்டாமல் வைத்துக்கொண்டு இருக்கிறோம். ஏன்? அடிப்படைக்காரணம் தமிழ் தெரிந்தவர்க்கு ஆங்கிலம் தெரியவில்லை, ஆங்கிலந் தெரிந்தவர்க்குத் தமிழ் தெரியவில்லை இரண்டும் தெரிந்தவர்க்குச் சைவ சித்தாந்தம் தெரியவில்லை, மூன்றும் தெரிந்தவர்க்கு வெளிநாடுபோகச் சந்தர்ப்பம் இல்லை தப்பித்தவறி அப்படிப் போனால் இதைப் பரப்ப உணர்ச்சி இல்லை.

சைவம், சமயத்தை அடிப்படையாகக்கொண்டதா? சாதியை அடிப்படையாகக் கொண்டதா? என்ற ஒருமுடிவுக்கு வரவேண்டும். இல்லையானால் அவன் சைவனா? என்ற கேள்வி வரும் ஆண், பெண் தவிர சாதி வேற்றுமை கிடையாது என்பர், 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்று ஔவைப்பிராட்டியார் கூறுகிறார். வள்ளலார் ஒருமாதிரி சாதியைப் பிரித்தார், உயிர்க் கொலையும் புலைப்பசியும் அற்றவர்கள் ஒருசாதி; அது உடையவர்கள் மற்றொருசாதி.

ஆண்மையுடைது ஆண், பெண்மையுடையது பெண். வாளை ஆள்வது வாளாண்மை, அதற்கு மேலே பேராண்மை, அதற்கு மேலே சான்ருண்மை. இந்தச் சான்ருண்மை என்ற சொல்லையும்' கயமை என்ற சொல்லையும் வேறு எந்த மொழியிலும் மொழிபெயர்க்க முடியாது. டில்லி பல்கலைக் கழகத்தில் 29 பேராசிரியர்கள் மொழி பெயர்க்கத் தெரியாமல் என்னிடம் கூறினுர்கள். எல்லா ஞானமும் கற்ற ஒருவன் எந்த ஒருசமயத்திலும், எந்தத்திசையிலும் ஓடிப்போய் விடாதபடி அடக்கி ஆளும் தன்மையுடையவன் சான்ருண்மையுடையவன். சான்ருண்மை உயர்ந்த குணங்களின் உச்சநிலை. கயமை இழிந்த குணங்களின் கடைசி எல்லை முன்ஞெருகாலத்தில் சான்ருண்மை ஒன்று இருந்தது, சான்ருேர்கள் சிலர் இருந்தார்கள் என்று நம்முடைய பேரப்பிள்ளைகள் பாடபுத்தகத்தில்தான் படிப்பார்கள், இதை இப்படியே போகவிடலாமா? போகவிடாமல் தடுப்பதுயார்? தெளிவுவேண்டும். இதற்கு அமைப்பு தேவை.

---

# அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி

வேலூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

நின்றுநெஞ் சுருகுவார்க் கருள்கச்சி யேகம்பம்
நிறைஏல வார்குழலியே
நித்தமு முறைகச்சி மேற்றளி காமாட்சி
நினைவார்தம் வினைகள் நீக்கும்

மன்றினு ளாடிமகிழ் ஓணகாந்தன் தளி
மடந்தை காமாட்சியம்மை
மயிலாலும் கச்சிய நேகதங் காபதம்
மாதேவி காமாட்சியே

சென்றுபணி கச்சிநெறிக் காரைக்கா டென்றும்
சேர்ந்துவாழ் காமாட்சியே
செப்புதற் கரியதிருக் குரங்கணில் முட்டம்
திகழினை யார்வளையம்மை

பன்றிப்பல் லணிபரமன் பாகத்துறை பாவை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (31)

# திருவீழிமிழலைத் தலச் சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

தஞ்சைமாவட்டம் நன்னிலம் வட்டத்தில் பூந்தோட்டத்திற்கு மேற்கே அரிசிலாற்றின் வடகரையில் அழகிய கிராமமாக அமைந்து விளங்கும் தலம் திருவீழிமிழலை. இது சோழநாட்டுக் காவிரித் தென் கரைத் தலங்களில் 61 ஆவது தலமாகப் போற்றப்பெறுகிறது. திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது. மாயூரத்திலிருந்து திருவாரூர் செல்லும் இருப்புப்பாதையில் பூந்தோட்டம் புகைவண்டி நிலயத்துக்கு மேற்கே 10 கி. மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். பூந்தோட்டத்திலிருந்து இத்தலத்துக்குச் செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன. மாயூரம், பூந்தோட்டம், கும்பகோணம், முதலிய ஊர்களிலிருந்தும் இத்தலத்திற்குப் பேருந்துகளில்செல்லலாம்.

**தலப்பெருமை :**

இத்திருத்தலம் திருமால் தேவலோகத்தில் இருந்து விமானம் கொண்டுவந்து அதில் பெருமானை எழுந்தருளுவித்து வழிபட்டுச் சக்கராயுதம் பெற்ற பெருமை உடையது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அடியார்களுடன் தனித்தனியே இருபெருமடங் களில் தங்கி ஈசன் அளித்த பொற்காசுகளைக் கொண்டு அடியார் களுக்குத் திருவமுதளித்த வரலாற்றுச் சிறப்புடையது. இறைவன் காத்தியாயன முனிவரின் மகளாகத் தோன்றிய உமையம்மையை மணம்புரிந்து கொண்டு என்றும் மணக்கோலத்தோடு விளங்குவது. சுவேத கேது என்ற மன்னன் இறைவனை வழிபட்டு எமபயம் நீங்கப் பெற்றது. திருமணம் ஆகாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணம் அருளவல்ல தலமாக விளங்குவது.

**கோயிலமைப்பு :**

திருக்கோயில் கிழக்குநோக்கி அமைந்து உள்ளது. சுவாமி அம்பாள் சந்நிதிகள் கிழக்குநோக்கியவை. அம்பாள்கோயில், சுவாமி கோயிலுக்கு இடதுபக்கம் உள்ளது. கோயிலுக்கு எதிரே தீர்த்தம் உள்ளது. கட்டைக்கோபுரநுழைவாயிலைக் கடந்தவுடன் வௌவால் நத்திமண்டபம் எனப்படும் நூற்றுக்கால்மண்டபம் உள்ளது. இராஜ கோபுரவாயிலைக்கடந்து உள்ளேசென்றால் விநாயகர் சம்பந்தருக்குப்

படிக்காசளித்தபலிபீடம் துவஜஸ்தம்பம் நந்திமண்டபம் திருமூலநாதர் கோயில்கள் உள்ளன. வெளிப்பிராகாரத்தை வலமாகவரும்போது தெற்கே சுந்தரருக்கு இறைவன் திருவாபரணம் அளித்த பலிபீடத்தையும், மேற்கே திருநாவுக்கரசருக்குப் படிக்காசு அளித்த பலிபீடத்தையும் தரிசிக்கலாம். மேற்குவாயிலில் உள்ள படிக்காசு விநாயகரையும் திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் வழிபட்டு வலமாக வந்து இரண்டாம் கோபுர நுழைவாயிலைக்கடந்து உள்ளே சென்ருல் முதற்பிராகாரம். சுவாமிகோயில் மாடக்கோயில் அமைப்பில் உயரமான மண்டபங்களோடு திகழ்வதைக் காணலாம்.

விண்ணிழி விமானத்தில் மூலலிங்கமாக விளங்கும் வீழிநாதேஸ்வரர் விளங்குகிருர். சுவாமிக்குப்பின்புறம் இறைவன் பார்வதிதேவியோடு எழுந்தருளியிருக்கும் திருவுருவங்களைத் தரிசிக்கலாம். நுழைவாயிலில் துவாரபாலகர்கள் விளங்குகின்றனர். கர்ப்பக்கிருகமும் அர்த்தமண்டபமும் தனி அமைப்புடையவை. இறைவன் திருமணம் புரிந்துகொண்டதலம் என்பதற்கு ஏற்பக் கர்ப்பக்கிருகத்தின் நடுவில் அரசாணிக்கால் எனப்படும் தூணும், வெளியில் உள்ள மகாமண்டபத்தில் பந்தற்கால் எனப்படும் தூணும் விளங்குகின்றன.

மகாமண்டபத்தில் தனிமண்டபத்தில் இத்தலத்தின் தனிச்சிறப்புக்குரிய மாப்பிள்ளைசுவாமி எனப்படும் கல்யாணசுந்தரர் விளங்குகிருர். பெரியதிருவுருவம். உமையம்மையைத் தழுவிய நிலையில் விடையினருகில் மணவாளகோலத்தில் காணப்படுகின்ருர். பாதத்தில் திருமால் கண்ணைப் பறித்துச் சார்த்திய தாமரைமலர் விளங்குகிறது. பெருஞ்சிறப்போடு கல்யாணசுந்தரர் விளங்கும் மண்டபத்திற்கு அருகில் பிக்ஷாடனர், காலசம்காரமூர்த்தி முதலியோர் எழுந்தருளியுள்ளனர். சுவாமி சந்நிதிக்கு வலதுபக்கம் தியாகேசர், கையில் சக்கராயுதத்துடன் எழுந்தருளியுள்ளார். அருகில் திருமால் சக்கராயுதம்வேண்டி நிற்கிருர். வழிபட்டு முதற்பிராகாரத்தை வலம் வரும்போது இத்தலத்தின்பெருமைக்குரிய விண்ணிழிவிமானத்தைத் தரிசிக்கலாம். செப்புத்தகடுகள் வேயப்பெற்றுத் தங்கக்கலசத்தோடு விளங்கும் இவ்விமானம் தனி அழகு உடையது. ஞானசம்பந்தருக்கு இறைவன் சீகாழியில் விளங்கும் தம்திருக்கோலத்தைக்காட்டியருளிய ஐதிகச்சிற்பங்கள் உள்ளன.

தெற்குப் பிராகாரத்தில் தக்ஷிணமூர்த்தி சந்நிதி சிறப்புடையது. அருகில் மூலவிநாயகர்கோயில் உள்ளது. மேற்கே சோமாஸ்கந்தர், முருகன், மகாலக்ஷ்மி திருவுருவங்கள் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுரர் சந்நிதி உள்ளது.

வடகிழக்கு மூலையில் விளங்கும் சபையில் எழுந்தருளிய நடராச ரையும் வழிபட்டு இரண்டாவது பிராகாரத்தின் வடக்கு வாயில் வழியாக அம்பாள்சந்நிதியை அடையலாம். அம்பிகை அருள்மிகு சுந்தரகுசாம்பிகை பேரழகோடு விளங்கும் மூர்த்தியாவார்.

இவ்விருகோயில்களைத் தரிசித்தபின் இறைவனது திருக்கல்யாண கோலத்தை வழிபட்ட மனநிறைவு நமக்கு உண்டாவதை நன்கு உணரலாம்.

**மூர்த்திகள் :**

பிள்ளையார் பெயர் படிக்காசு விநாயகர் இறைவன் அருள்மிகு வீழிநாதேஸ்வரர் ; வீழியழகர், நேத்திரார்ப்பணேசுவரர் எனவும் வழங்கப்பெறுவார். அம்பிகை அருள்மிகு சுந்தரகுசாம்பிகை. தமிழில் பெருநலமுலையம்மை என வழங்கப்படுகிருர். இத்தலத்தில் விளங்கும் திருவுலாநாயகரான கல்யாண சுந்தரேசுவரர் மாப்பிள்ளை சுவாமி எனப்படுவார். தீர்த்தம் விஷ்ணுதீர்த்தம். தலமரம் வீழி.

## புராண வரலாறுகள்

**திருமால் சக்கரம் பெற்றது :**

ஒருகாலத்தில் ததீசி முனிவருடன் போர்புரிந்தபோது தன் கையிலுள்ள சக்கராயுதத்தை விஷ்ணுமூர்த்திபிரயோகிக்க, அது கூர் மழுங்கித் திரும்பிவந்தது. அதனுல் வேறு சக்கரம் பெறவேண்டித் தேவர்கள் சொல்லியதைக் கேட்டுச் சிவபெருமானிடமிருந்ததும் சலந்தரனைத் தடிந்ததுமான சக்கரத்தைப் பெறவேண்டி நாடோறும் ஆயிரம் தாமரைமலர்களால் அர்ச்சித்துவரலாயினுர். ஒருநாள் ஒரு பூக்குறையக்கண்டு, பூசையை எப்படியேனும் நிறைவாக்கக்கருதி, தாமரை மலர்போன்ற தன் கண்மலரில் ஒன்றைப் பறித்துச்சாத்தி வழிபட்டார். சிவபெருமான் காட்சிகொடுத்துச் சக்கராயுதத்தையும் இழந்த கண்ணையும் அளித்தருளினர். விஷ்ணுமூர்த்தியும் கமலக் கண்ணன் என்று பெயர்பெற்ருர்.

நீற்றினை நிறையப்பூசி நித்தல்ஆ யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி ஒருநாள் ஒன்று குறையக் கண் நிறைய இட்ட
ஆற்றலுக்கு ஆழிநல்கி அவன்கொணர்ந் திழிச்சுங்கோயில்
வீற்றிருந் தளிப்பர்வீழி மிழலையுள் விகிர்த ஞரே.

என்பது இத்தலத் தேவாரம்.

**சலந்தரனைத் தடிந்த வரலாறு :**

சலந்தரன் என்பவன் மிகவும் வலிமை பெற்று யாவரையும் வருத்தி வருங்காலத்தில், இந்திரன் தனக்குப்பயந்து கைலையை அடைந்திருக்கின்றனன் என்பதறிந்து, அங்குச் செல்கின்றபோது அஃதறிந்தபெருமான் வயோதிக வடிவத்துடன் முன்தோன்றி, அவன் செல்லும் காரணம் வினவி அறிந்து, தன் காற்பெருவிரலால் தரையில் சக்கரம் கிழித்து, "இதனை எடுக்கவல்லையோ ?" என, அவன் அதனை எடுத்துத் தலையில் வைத்தமாத்திரத்தில் அச்சக்கரம் அவன் தலையை அறுத்து வீழ்த்தியது. இவ்வரலாறுகளை விளக்கும் தேவார, திருவாசகப் பாசுரங்கள் பலவுள்ளன.

**சுவேதகேது வழிபட்டது :**

சுவேதகேது என்ற பெயருடைய மன்னன் இத்தலத்திற்கு வந்து வீழிநாதரை வழிபட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு விதிக்கப்பட்டிருந்த 18 வயது பூர்த்தியாகும் காலத்தில் காலன் வந்து சுவேத கேதுவை அழைத்தான். சுவேதகேது சிவபெருமானைக் குறித்துத் தோத்திரம் செய்துகொண்டிருந்தான். எமன் சுவேத கேதுமீது காலபாசத்தை வீசினான். இறைவன் சிவலிங்க வடிவத்தி லிருந்து தோன்றி எமனைக் காலால் உதைத்தருளி, சுவேதகேதுவுக்கு என்றும் பதினெட்டு வயதினராக வாழும் வரத்தை அருளினார் என்பது இத்தல வரலாறு திருக்கடவூரில் மார்க்கண்டேயருக்கு அருள்செய்ததுபோல இங்கும் சுவேதகேதுவுக்கு அருள் செய்த காலசம்காரமூர்த்தி எழுந்தருளியுள்ளார். சுவேதகேது சொல்லித் தோத்திரித்த பின்வரும் சுலோகத்தைச் சொல்வோர் எமபயம் நீங்கி இன்புறுவர் என்று இத் தலமான்மியம் கூறுகிறது.

**காலசம்காரமூர்த்தி தோத்திரம் :-**

ஸ்ரீ கண்ட பார்வதிநாத தேஜினி புரநாயக
ஆயுர்பலம் ஸ்ரீயந்தேகி, ஹரமே பாதகம்ஹர
பூகைலாச நிவாசாய கல்யாண புரவாசிநே
பஞ்சாக்ஷர புரேசாய தக்ஷிகாசிநி வாசிநே
ஷண்மங்கள புரேசாய சுவேதாரண்ய வாசிநே
ஆகாச நகரேசாய பஞ்சாரண்ய நிவாசிநே
நேத் ரார்ப்பண புரேசாய ஸ்ரீதேஜிநீசாய தே நம :

**இறைவன் திருமணம்கொண்டது :**

காத்யாயனமுனிவரும் அவர் மனைவி சுமங்கலையும் செய்த அரிய தவம் காரணமாக அம்பிகை அவர்கட்குக் குழந்தையாகத் தாமரை

மலரில் தோன்றினாள். இருவரும் அக்குழந்தையை எடுத்துப் போற்றி காத்தியாயனி எனப் பெயரிட்டு வளர்த்தனர். திருமணப்பருவம் அடைந்த தன் மகளுக்கு ஏற்ற மணவாளன் கிடைக்கவேண்டுமே என்று இறைவனைப் பிரார்த்தித்தார் முனிவர். இறைவன் கிழவேதியர் வேடந்தாங்கிவந்து முனிவர் மகளை மணந்துகொள்ள வேண்டினார். காத்தியாயன முனிவர் தமது அன்புப்புதல்வியை இக்கிழவருக்கா மணம் முடிப்பது என்று ஐயுற்ற வேளையில் பெருமான் தமது எழிலார்ந்த இளமைத் திருக்கோலத்தை அவருக்குக்காட்டி, முனிவரின் புதல்வியாகத் தோன்றிய உமையம்மையை, சித்திரைமகத்தன்று திருமணம் புரிந்து அனைவருக்கும் தமது திருமணக் கோலத்தைக் காட்டி அருள்புரிந்தார் என்பது இத் தலத்தின் குறிப்பிடத்தக்க வரலாறாகும்.

**கழுமலக்காட்சி காட்டியது :**

திருஞானசம்பந்தர் அடியார்களோடும், அப்பர் சுவாமிகளோடும் இத்தலத்தில் தங்கியிருந்த காலத்தில் சீகாழிப் பிராமணர்கள் வந்து வணங்கித் தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டினர். அதற்குத் திருஞான சம்பந்தப்பெருமான் "நல்லது; இன்று கழித்து நாளை இறைவர் அருள்பெற்றுப் போவோம்" என்றனர். அன்றிரவு சிவ பெருமான் பிள்ளையார் கனவில் தோன்றித் "தோணியில் இருந்த வண்ணம் இந்த விண்ணிழி விமானத்தில் நமது திருக்கோலத்தைக் காட்டுகிறோம்" எனக்கூறி மறைந்தருளினர்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் அதிசயித்துத் திருக்கோயிலுக்குச் சென்று அவ்வண்ணமே திருத்தோணிபுரக் காட்சியைக் கண்டு. "மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற வாணுதல் மான்விழி மங்கையோடும், புகலி நிலாவிய புண்ணியனே! மிழலை விண்ணிழிகோயில் விரும்பியது என்கொல் சொல்லாய்?" என்ற கருத்தமைந்த திருப்பதிகம் பாடித்துதித்தார். சீகாழி அந்தணர்களைப்பார்த்து "பெருமான் விரவிய தானங்கள் எங்கும் சென்று விரும்பியகோலம் பணிந்து போற்றிவருவதை மேற்கொண்ட காதலைக்கண்டு அவ்வாறு காட்சியளித்தது" என்று கூறி அந்தணர்களைச் செல்லுமாறு விடுத்தனர்.

**படிக்காசு அருளியது :**

ஞானசம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்தில் மண்ணின்மிசை வான் பொய்த்தது; உலகில் பசி விரவியது; பாலறுவாயருடன் அரசும் இறைவன் அடியார்க்கும் கவலை வருமோ எனக்கருத்திற் கொண்டார்கள். மிழலைப்பெருமான் அவர்கள் கனவில் தோன்றிக் "கோயிலின் கிழக்கு மேற்குப்பீடங்களில் நித்தம்

ஓரோர் காசு அளிப்போம்'' என்று அருள்புரிந்தருளினர். அவ்வாறே படிக்காசு பெற்று அவ்விருவரும் நாதன் அடியார்களை அழைத்துத் திருவமுது செய்வித்திருந்தகாலத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் திருமடத்தில் திருவமுது காலத்திலாகாமைகண்டு பிள்ளையார் தமக்கு அளித்த காசு வாசிபடுங்காரணத்தை அறிந்து 'வாசி தீரவே காசு நல்குவீர்' எனப்பதிகம்பாடி நற்காசுபெற்றார்.

சுந்தரமூர்த்திநாயனுர் இவ்வரலாற்றினைத் தாம் பாடிய இத்தலப் பதிகத்தில்,

"இருந்து நீர்தமி ழோடிசை கேட்கும் இச்சையால்
காசு நித்தம் நல்கினீர்"

என்று போற்றியருளினர். நம்பியாண்டார்நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையிலும்,

"வீழி மிழலைப் படிக்காசு கொண்டபிரான்"

என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்பர் அருளிய திருவாய்மூர்த் திருக் குறுந்தொகையிலும்,

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டம் தவிர்ப்பார்"

என்று குறிக்கப்பெற்றுள்ளது. திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் எழுந்தருளியிருந்த திருமடங்கள் வடக்குவீதியில் உள்ளன. ஞான சம்பந்தர் அப்பர் திருவுருவங்கள் அங்குள்ளன. படிக்காசு பெற்று இருவரும் அமுதருந்திய வரலாற்றுத் தொடர்புடைய தலங்கள் பல இவ்வூரைச் சூழவுள்ளன.

**விண்ணிழிவிமானம் :**

வீழியழகர் எழுந்தருளியுள்ள விமானம் விண்ணிழி விமானம் எனப்பெறும். விண்ணிழி விமானம் திருமாலால் தெய்வ உலகத்தி லிருந்து கொண்டுவந்து தாபிக்கப் பெற்றது என்பதனைத் திருஞான சம்பந்தர் இத்தலத் தேவாரத்திருப்பதிகத்தில்,

"தன் தவம் பெரிய சலந்தரன் உடலம்
தடிந்தசக்கிரம் எனக்கு அருள் என்று
அன்று அரி வழிபட்டு இழிச்சிய விமானத்து
இறையவன் பிறையணி சடையன்"

எனக் குறிப்பிட்டருளுவதாலும் நன்கறியலாம்.

**திருமணவாழ்வுபெற :**

இத்தலத்தில் விளங்கும் கல்யாணசுந்தரேசுவரருக்கு மாலை அணிவித்துச் சுவாமி அம்பாளுக்கு அருச்சனை ஆராதனைகள் செய்வித்து வழிபட்டால் திருமணமாகாத ஆண் பெண்களுக்குத் திருமணம் விரைவில் கைகூடுகிறது என்பது இத்தலத்தின் சிறப்புக் களில் ஒன்றாகும்.

உமையம்மை இறைவனைத் திருமணம் புரிந்துகொள்ளத் தவமிருந்து தம் மனோரதம் ஈடேறப்பெற்றதலமாதலால் இன்றும் அன்பர் பலர் இறைவனையும் இறைவியையும் வழிபட்டுத் தங்கள் எண்ணம் ஈடேறப்பெறுகிறார்கள். இத்தலத்தை வழிபட்டு நாடோறும் காலையில் எழுந்து நீராடி,

"தேவேந்திராணி நமஸ்துப்யம், தேவேந்திரப் பிரியபாமினி
விவாக பாக்யம் ஆரோக்யம் புத்ரலாபம் ச தேஹிமே
பதிம்தேஹி சுதம்தேஹி சௌபாக்யம் தேஹிமேசுபெ
சௌமங்கல்யம் சுகம்ஞானம் தேஹிமே சிவசுந்தரி
காத்தியாயனி மகாமாயே மகாயோக நிதீஸ்வரி
நந்தகோப சுதம்தேவம் பதிம்மே குரு தே நம :"

என்ற திருமாங்கல்யம் அருளவல்ல சுலோகத்தை ஒருமண்டலம் (நாற்பத்தெட்டு நாட்கள்) பக்தியோடு பாராயணம் செய்யும் பெண்களுக்குத் திருமணம் கைகூடும் என இத்தலமான்மியம் கூறுகிறது.

**சில வழக்காறுகள் :**

திருஞானசம்பந்தர்க்கு இறைவன் சீகாழியில் விளங்கும் தமது திருக்கோலத்தைக் காட்டியருளிய தலமாதலானும், திருஞானசம்பந்தர் இரண்டு திருப்பதிகளையும் இணைத்துத் திருப்பதிகம்பாடியிருத்தலாலும், சீகாழித் தலத்துக்குரியனபோல இத்தலத்திற்குத் திருப்பதிகங்கள் பலவும் அருளிச்செய்திருத்தலானும் 'காழிபாதி வீழிபாதி' என வழங்கும் சொல்வழக்கு வழங்கிவருகிறது.

திருஞானசம்பந்தர் இத்தலத்தில்வாழும் அந்தணர்களைப் பற்றிப் போற்றியுரைக்கும் பாடல்கள் மிகுதியாயிருப்பதை நாம் அறியலாம். தில்லை மூவாயிரவர்போலத் திருவீழிமிழலையில் ஐநூறு அந்தணர்கள் விளங்கினர் என்பதை இத்தலத்தின் திருவிசைப்பா,

"ஐநூற்றந்தணர் ஏத்தும் எண்ணில்பல் கோடி
குணத்தர் ஏர்வீழி இவர்நம்மை ஆளுடையாரே"

எனக் கூறுகிறது. திருவீழிமிழலைக்கருகில் அந்தணர்கள் வாழும் பகுதியில் ஐநூற்றுப்பிள்ளையார்கோயில் உள்ளது. ஐநூறு குடும்பங்களால் கொண்டாடப்பெறுவதால் இப்பிள்ளையார் இத்திருப்பெயரால் வழங்கப்பெறுகிறார். வீழிநாதர் இத்தலத்திற்கு எழுந்தருளித் திருப்பதிகம் பாடிய சுந்தரருக்குத் தெற்குப்பிராகாரத்திலுள்ள பலிபீடத்தில் திருவாபரணங்கள் அளித்தருளினார் என்ற வரலாறும் கூறப்படுகிறது.

ஆவுடையார்கோயில் கொடுங்கை, திருநனிபள்ளி, கோடிவட்டம், திருவீழிமிழலை வௌவால்நெற்றி மண்டபம் ஆகியவற்றைக் கோயிற் கலைகளில் சிறந்தனவாக இணைத்துக்கூறுவர்.

## திருப்பதிகங்கள்

**தேவாரத்திருப்பதிகங்கள்:**

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் 1–4, 11, 20, 35, 82, 92, 124, 132. 3–9, 80, 85, 98, 111, 116, 119 ஆக பதிகங்கள் 15. (1–4 மட்டும் திருப்புகலியும், திருவீழிமிழலையும் இணைத்துப்பாடியது.)

திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் 4–64, 95. 5–12, 13. 6–50, 51, 52, 53. ஆக பதிகங்கள் 8.

சுந்தரர் அருளிச்செய்த திருப்பதிகம் 7–88. ஆக பதிகம் 1.

இத்தலப்பெயர் குறிக்கப்பெற்றுள்ள பிற தலத் தேவாரப் பாடல்கள்:- திருநாவுக்கரசர் 6-2-2, 6-7-7, 6-9-10, 6-41, 10, 6-70-7. சுந்தரர் 7-31-4, 7-46-7.

[முதல் எண் திருமுறை. இரண்டாவது எண் திருப்பதிகம். மூன்றாவது எண் திருப்பாடல்.]

பதினொராம்திருமுறை, பன்னிரண்டாம் திருமுறையிலும் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்து அம்பிகையின்மேல் வடுகநாத தேசிகர் பாடிய பெருநலமுலையம்மை பிள்ளைத்தமிழ் உள்ளது. இத்தலத்தின் முருகன்மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். காளமேகப்புலவர் தனிப்பாடலும் உள்ளது.

**கல்வெட்டுக்கள்:**

இத்தலத்திலுள்ள கல்வெட்டுக்கள் 68. வீழிமிழலை என்றே இத்தலம் வழங்கப்பெறுகின்றது. முதற்குலோத்துங்கன் காலத்து உலகும்

யக்கொண்ட சோழவளநாட்டு வேணாட்டுப்பிரமதேயம் திருவீழி மிழலை என வழங்கியது. சுவாமி பெயர் வீழிநாதர், வீழிமிழலைநாதர் என்பன. கோயில் பிராகாரத்தில் சிலரால் பிரதிட்டை செய்யப்பெற்ற நின்றருளிய நாயனர், நெறிவார்குழலி. நாச்சியார், திருவேட்டீஸ்வர முடைய மகாதேவர், திருவேகம்பமுடையார், பார்வதீஸ்வரமுடை யார், திருத்தண்டுூன்றிய மகாதேவர் கோயில்களும் பிரதிட்டிக்கப் பெற்ற இடங்களும் குறிக்கப்பெறுகின்றன. அம்மை, காமகோட்டம் உடைய நாச்சியார் என்று அழைக்கப்பெறுகிறார்.

திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும், மாணிக்கவாசக ருக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைந்திருந்தன. முன்பு இரு வருடைய மடங்களும் வடக்குவீதியில் இருந்தன என்பதும் அறியக் கிடக்கின்றன.

ஆதித்தன் மகனாகிய முதற்பராந்தகன் காலத்திலிருந்து பதினொரு சோழமன்னர்களின் காலத்துக் கல்வெட்டுக்களும், சடாவர்மன் சுந்தரபாண்டியன், வீரபாண்டியதேவன் கல்வெட்டுக்களும், விஜய நகரபரம்பரையைச் சேர்ந்த விருப்பண்ணவுடையார் கல்வெட்டு ஒன்றும் பெயரறியப்பெருதன பதினான்குமாக அறுபத்தெட்டுக் கல் வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ராஜேந்திர சோழன் திருவீழி மிழலை வடக்கு வீதியிலுள்ள திருநாவுக்கரசர் திருமடத்திற்கு நிலம் விட்ட செய்தி அறியப்படுகிறது. மூன்றும் ராஜராஜன் திருவீழி மிழலைக் கோயில் மூன்றும் பிராகாரத்தில் திருவாதவூரர் மாணிக்க வாசகர் படிமத்தைப் பிரதிஷ்டை செய்தான். சடாவன்மன் சுந்தர பாண்டியதேவன் திருக்கை கொட்டித் திருப்பதியம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்தான். முதல் ராஜராஜசோழன் காலத்தில் ஐப்பசி ஓணத்திருவிழா தரிசனத்திற்காகவரும் அன்பர்களுக்கு அன்னம் வழங்கக் காசு அளிக்கப்பட்டசெய்தியும், இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றமையும் அறிவிக்கும். முதற்குலோத்துங்கன் தமது ஆட்சி முப்பத்துநான்காம் ஆண்டில் சண்டேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசைக்கு ஏற்பாடு செய்தான் வாணியின் பாதனை அரிகுலகேசரிவிழுப்பரையனால் ஸ்ரீகால காலன் என்னும் வாள் வீழிமிழலைநாதர்க்கு வழங்கப்பெற்றது.

மாப்பிள்ளைச்சாமி எனப்பெறும் மணவாளத் திருக்கோலப் பெருமான் அழகிய மணவாளப்பெருமான் என்று குறிக்கப்பெறு கின்றார். இந்த மூர்த்தியையும், இராஜேந்திர சோழ அணுக்கப் பல்லவரையர் புதுக்கிப் பிரதிட்டை செய்ததாகத்தெரிகிறது.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N. I. U.,

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே. (5)

### அ. பொருந்தியமுப்புரை.

(1) அம்பிகைக்குத் திரிபுரை என்றும், திரிபுரசுந்தரி என்றும் பெயர்கள் உண்டு. மூவுலகங்களிலும் மிகச் சிறந்த பேரழகி ஆதலால் திரிபுரசுந்தரி எனப்பட்டாள். மூன்றுமூன்றாகவுள்ள அனைத்திலும் பொருந்தியிருப்பதால் திரிபுரை அல்லது முப்புரை எனப் பெயர் பெற்றாள். திரிபுராந்தகனின் மனைவியாதலாலும் அவ்வாறு அழைக்கப்படுகிறாள். அவள் பொருந்தியுரையும் முப்புரங்களை - திரயங்களை விரிவாகக் காண்போம்.

(2) அனைத்தினுக்கும் மூலகாரணமாகிய பிரணவத்திலுள்ள 'அட்சரத்திரயம்' என்னும் அ, உ, ம ஆகிய மூன்று எழுத்துக்களின் உட்பொருளாய்ப் பொருந்துவதால் பொருந்திய முப்புரை என்றார்.

(3) முதல் மூன்று வேதங்களும் 'த்ரயி' என அழைக்கப்படும். மூவேதங்களின் உட்பொருளாய், பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேருமாய்ப் பொருந்தி விளங்குவதால் 'முப்புரை' ஆனாள்.

'ருக்' வேதம் "அக்னிமீ:டே..." என்று அகரத்தில் துவங்குகிறது.

'யஜுர்' வேதம் "இஷேத்வா..." என்று இகரத்தில் துவங்குகிறது.

'சாம' வேதம் "அக்ன ஆயாஹி..." என்று அகரத்தில் துவங்குகிறது.

அ, இ, அ ஆகிய இம் மூன்று துவக்க எழுத்துக்களும் இணைந்து "ஐம்" என்னும் "வாக்பவபீஜம்" தோன்றுகிறது என்று பிரபல உரை ஆசிரியரும் தேவி உபாஸகருமான திரு. அண்ணா. என். சுப்பிரமணிய அய்யர் விளக்குகிறார். மூன்று வேதங்களில் பொருந்தியவள் என்பதை லலிதா ஸகஸ்ரநாமம் 'த்ரயை' எனக் குறிப்பிடுகிறது.

(4) ஒரு சீடனின் நேர்குரு 'ஸ்வகுரு' என்றும், அவரது குரு அல்லது குருவின் குரு 'பரமகுரு' என்றும், அவரது குரு 'பாமேஷ்டி குரு' என்றும் அழைக்கப்படுகின்றனர். இம்மூன்று குருவினிடத்தும் பொருந்தி அருள் பாலிப்பதால் அம்பிகை முப்புரை ஆனாள்.

(4-A) அல்லது, நமது பெற்றோர் 'ஜன்மகுரு' என்றும், பாடம் கற்பிக்கும் ஆசிரியர் 'வித்யாகுரு' என்றும், மந்திர உபதேசம் செய்யும் ஞானாசிரியர் 'தீட்சாகுரு' என்றும் பெயர்பெறுவர். இம்மூன்று குருவினிடத்திலும்பொருந்தி அருள்பாலிப்பதால் 'முப்புரை' ஆனாள்.

(5) வழிபாட்டுக்குரிய 'முத்தீ' எனப்படும் 'தட்சிணாக்னி' 'கார்கபத்யம்', 'ஆகவனியம்' ஆகிய மூன்று அக்னிகளிலும் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(6) மூவுடல்களாகிய ஸ்தூலசரீரம், சூட்சுமசரீரம், காரண சரீரம் ஆகியவற்றில் பொருந்திநிற்பதால் 'பொருந்திய முப்புரை' என்றார்.

(6-A) 3 முதல் 6 வரையுள்ள தலைப்புக்களில் கண்ட கருத்துக்கள் லலிதாசகஸ்ரநாம பாஷ்யத்தின் தொடக்கத்திலுள்ள பாஸ்கர ராயரைப் பற்றிய குறிப்பில் காணப்படுகிறது.

"பாசுராநந்தநாதர் என்ற பாஸ்கரராயர் தட்சிணாக்னி - கார்கபத்யம் - ஆகவனியம் என்னும் அக்னிகளிலும், ஸ்தூல - சூட்சும - காரண சரீரங்களிலும், ருக் - யஜுர் - சாமம் என்னும் வேதங்களிலும் உறைபவளாகிய, மூன்று குருக்களின் ஸ்வரூபிணியான திரிபுரசுந்தரியை ஆராதிப்பவர்" என்பதே அக்குறிப்பு.

(7) குண்டலினியோகத்தில் கூறப்படும் இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய நாடிகளில் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(8) மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களும் மூன்று பகுதிகளாக அல்லது கண்டங்களாகப் பிரிக்கப்படும். அக்னிகண்டம், சூர்யகண்டம், சோமகண்டம் என்னும் மூன்று கண்டங்களில் பொருந்துபவள் முப்புரை ஆனாள். இதனை லலிதா சகஸ்ரநாமம் 'திரிகண்டா' என்ற நாமாவில் குறிப்பிடுகிறது.

(9) குண்டலினிசக்தி மேலெழும்பும் வழியிலுள்ள பிரம்மக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்திரக்கிரந்தி ஆகிய மூன்று முடிச்சுக்களைப் பொருந்தி பேதித்துக் கடந்துவருவதால் 'முப்புரை' ஆனாள்.

"பிரம்மக் ரந்தி விபேதினி
விஷ்ணுக் ரந்தி விபேதினி
ருத்ரக் ரந்தி விபேதினி"

ஆகிய நாமாக்கள் இதனைக் குறிப்பிடும்.

(10) 'திரிகோணகா' என்றபடி முக்கோணங்களில் ஆவாகனம் செய்து வழிபடப்படுவதால் அல்லது முக்கோணங்களில் உறைதலால் திரிபுரை - முப்புரை ஆனாள்.

(11) ஸ்ரீவித்தையில் கூறப்படும் வாக்பவகூடம், சக்திகூடம், காமகிரிகூடம் ஆகிய கூடங்களில் பொருந்துவதால் 'முப்புரை' ஆனாள். "திரிகூடாத்மிகா" என்று லலிதாசகஸ்ரநாமம் கூறும்.

(11-A) மற்றும் ஸ்ரீ சக்ரத்தின் மத்யகோணத்தின் மூன்று மூலைகள், மேற்படி பீடதேவதைகள், கோணத்திரயம், ரேகாத்திரயம், பூபுரத்திரயம் ஆகியவற்றிலெல்லாம் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(12) கீழ் - மேல் - நடு உலகங்கள் அனைத்திலும் உறைபவள் 'முப்புரை' எனப்பட்டாள்.

(13) மும்மூர்த்திகளிடத்தும் அவ்வவர் உலகிடைப் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(13-A) அவர்களின் சக்திகளாகவும் பார்வதி - லட்சுமி - சரஸ்வதி என விளங்குவதால் முப்புரை ஆனாள்.

(14) படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று செயல்களிலும் அவளே ஆதிக்கம் செலுத்துவதால் முப்புரை ஆனாள். அபிராமி அந்தாதியிலும் "பூத்தவளே" என்ற பாடலில் இதனைக் குறிப்பிடுகிறார். அவளது பாததூளியின் துணைகொண்டே மும்மூர்த்திகளும் முத்தொழில்களைப் புரிகின்றனர் என்று சௌந்தரிய லகரி விளக்குகிறது.

(15) இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளாகவும் இருப்பதால் முப்புரை ஆனாள்.

(16) ஜாக்ர, ஸ்வப்ன, சுழுப்தி என்னும் மூன்று அவஸ்தைகள் அல்லது நிலைகளுக்கு அவளே காரணமாய்ப் பொருந்துகிறாள். 'திரிபுராம்பிகா' என்கிறது சகஸ்ரநாமம். 8 வது ஆவரணத்திற்கும் சரீரங்களுக்கும் அவஸ்தைகளுக்கும் திரிபுராம்பிகாவே அதிதேவதை.

(17) சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்னும் மூன்று குணங்களையும் தானே தந்து பொருந்துவதால் முப்புரை ஆனாள். இதனை 'திரிகுணா' என்கிறது சகஸ்ரநாமம்.

(18) முச்சுடர்கள் எனப்படும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றில் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(19) 'திரிவர்க்க நிலயா' என்ற சகஸ்ரநாமப்படி முப்பாலென்னும் அறம், பொருள், இன்பத்தில் நிலைபெறுவதால் முப்புரை ஆனாள்.

(20) கடவுளுக்கு மூன்று நிலைகள் உண்டு. பொன்னும் அணிகலனும் போன்ற அபேதநிலை. குடமும் நீரும் போன்ற பேதநிலை, மலரும் மணமும் போன்ற பேதாபேதநிலை ஆகிய மூன்று நிலைகளிலும் அம்பிகை இருப்பதால் முப்புரையானாள். இந்நிலைகளில் அம்பிகையின் வியாபகத்தை "ஒன்றாய் அரும்பி..." என்ற பாடலில் அபிராமிபட்டரும் குறிப்பிடுகிறார்.

(21) அறிவு, அறிபவள், அறியப்படுபொருள் ஆகிய ஞாதா, ஞானம், ஞேயம் என்பனவாக இருப்பதால் முப்புரை ஆனாள்.

(22) தாபத்திரயங்கள் என்னும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுக்குக் காரணமாகித் தானே அவற்றை நீக்கவும் உதவுவதால் 'முப்புரை' ஆனாள்.

(23) யக்ஞப்பிரியா, யக்ஞகர்த்தி. யஜமானஸ்வரூபிணி என்ற நாமக்களில் கூறியபடி வேள்வியினை ஆற்றுபவள். வேள்விக்குரியவள் ஆகிய மூன்று நிலைகளிலும் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(24) மணி, மந்திர, ஔடதம் என்னும் மூன்று உபாயங்களாகவும் இருப்பவள் அவளே, மணியே! எனவும், பிணிக்கு 'மருந்தே!' எனவும், அந்தாதியே கூறும். 'சர்வ மந்திரஸ்வரூபிணி' என சகஸ்ரநாமம் கூறும்.

(25) நேற்று, இன்று, நாளை என எக்காலத்தும் தான் நிலையாய் நின்று நிலவுவதால் முப்புரை ஆனாள். முக்காலத்திலும் காலத்தின் தத்துவமாய் அவளே இருப்பதால் காளிகா அல்லது காளி எனப்படுகிறாள்.

(வரும்)

O. V. ALAGESAN
"SARAYU"
Chengalpattu.

12—6—80

* * மகாசந்நிதானம் ஊண் உறக்கமின்றி மடத்தின் விசேஷ பூஜா கிரியைகளையும், ஆலயத்தின் மஹாபிஷேக தீபாராதனை, வந்தனை, வழிபாடுகளையும், இன்னும் ஏனைய நித்திய நைமித்தியங்களையும் பக்தி சிரத்தையோடு கிரமம் தவறாது செய்தும், செய்வித்தும், இந்து சமய நெறி முறைகளையும், சைவ பரம்பரையையும் வாழ்வித்து வரும் காட்சி என் மனத்தினுள் என்றும் நீங்காது நிறைந்து நிற்கும்.

முக்காலமும் உணர்ந்த பெரியோர்களாகிய நமது முன்னோர்கள் துறவுக்கு ராஜாங்க மரியாதைகளை அளித்துச் சிங்காதனத்தில் இருத்தியும், பல்லக்கில் ஏற்றியும், சிவசம்பத்து வளர்ந்தோங்க ஏற்பாடு செய்திருக்கும் அழகை நினைக்கநினைக்க உள்ளம் ஆனந்தக்கூத்தாடுகிறது.

சந்நிதானத்தின் சைவப்பணி தழைத்தோங்க என்றும் இறைவன் திருவருள் துணை நிற்பதாக.

★

கீ. இராமலிங்கம் எம். ஏ.,
உறுப்பினர்:
மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
செனாய்நகர்,
சென்னை - 600 030.

9—7—80

* * வைகாசிமாதத்திய நமது "ஞானசம்பந்தம்" வந்து மகிழ்வித்தது. தலையங்கத்தைப் படித்து ஆர்வம் பொங்கப்பெற்றேன். அறைகூவி அழைக்கின்றார் நம் முதல் குருபரனார் என்று களிகூர்ந்தேன். "இணைவோம்! உழைப்போம்! உயர்வோம்!" என்னும் அறைகூவலை, 26 ஆவது குருமுதல்வரும் ஆணித்தரமாக வலியுறுத்தி வாழ்த்துவதைப் படித்து எழுச்சியுற்றேன்.

பயன் தரும் எந்தப்பணியைச் செய்வதற்கும் பல பகுதிகளிலுள்ள பல நல்லார் தேவை. எனினும், அப்பலரையும் இயக்குவிக்கும் அருளாற்றலை ஊற்றெடுத்துப் பரவச்செய்யும் அருள் எந்திரம், நமது திருமடத்துப்பூசைக்கட்டிலேயே உள்ளது என்பது எனது நம்பிக்கை.

அருள்வளம்பூண்ட தனியொருசெம்மலின் சிந்தையின் திண்மையே அந்த அருள் எந்திரத்தைப் பெருவிசையோடு இயக்கும் அருந்திறன் உடையதாகும்.

இருந்த இடத்தில் இருந்தே, அடியேனல் இயன்ற 'அணில்' தொண்டினை ஆற்றிவரும் ஆர்வமுடையேன் குருபிரானுர் அவ்வப் போது பணிக்கும் சிறுசிறு வேலைகளைச்செய்து மகிழ்வேன். இவ் வியக்கம் இனிது ஓங்கி இரும் பயன் விளைவிக்கவேண்டும் என்று இறையருளை இறைஞ்சிவருவேன்.

குருதேவரின் திருவடிகள் என் சென்னிக்கு அணிகலனுக என்றும் நிலவுக!

★

Smt KALYANI GANESAN, Bombay 400077

Ghatkopar (East) 10—6—80

* * 10—5—80 தேதியிட்ட ஞானசம்பந்தம் இதழ் கிடைத்து படித்தேன். குருபூஜை விழாவின் விபரங்கள் கண்டதும் நான் அங்கு படித்த இனிய நாட்கள் என் நினைவில் எழுகின்றன. எத்துணை இனிமையான நாட்கள் அவைகள்.

"மூல பண்டாரம் வழங்குகிருன் வந்து முந்துமினே" என்பது எவ்வளவு உண்மையான வாசகம். மனிதனுக்கு உண்மையான சொத்து அசைக்கமுடியாத தெய்வபக்திதான். அது அறநிலயங்களால் தான் நூற்ருண்டுகளாக வளர்க்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது.

இந்த அறநிலயங்கள் பல்லாண்டு பல்லாண்டு அரசியல்களின் இடையூறுகளையெல்லாம் எல்லாம்வல்ல இறைவனின் பெருங்கருணை யால் வென்று, நீடித்து மக்களுக்கு அருளாட்சி வழங்கி, மக்களை உன்னத வாழ்வு வாழவைக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

கி. வா. ஜ. அவர்களின் கடிதப்பாட்டல், அறுகயிறூசல், அபிராமி அந்தாதி - கட்டுரை எல்லாமே மனத்தைத் தொடுவனவாக அமைந் துள்ளன.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் வழிபாடு

திருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நக்ஷத்திரமாகிய ஆயில்யத்திருநாள் வழிபாடு 17—6—80 செவ்வாய்க் கிழமை திருப்பாம்புரம் ஸ்ரீ பாம்புரநாதர் ஆலயத்திலும், திருச்சிறுகுடி ஸ்ரீ மங்களநாதர் ஆலயத்திலும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வக் கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஓதுவாமூர்த்திகள் அவ்வத்தலத் திருப் பதிகங்களைப் பாராயணம் செய்தனர். ஆயில்யவிழா வெளியீடாக அச்சிடப்பெற்ற தலப்பதிகம் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. தருமையாதீனக்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. திருப்பதிக விளக்கச் சொற்பொழிவு நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் தரிசித்தும் கேட்டும் இன்புற்றனர்.

## சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்

## நாயன்மார்கள் குருபூஜை

கழற்சிங்க நாயனுர், அமர்நீதி நாயனுர் ஆகிய இரு நாயன்மார் களின் குருபூஜை முறையே 10—6—80, 19—6—80 ஆகிய தேதிகளில் மாலை 6-30 மணிக்கு நிலைய பூஜைமடத்தில் நடை பெற்றது பேராசிரியர் திரு. ஏ அய்யாசாமி அவர்கள் பெரிய புராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினர்கள். நிலைய அன்பர் களும் ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் கேட்டுப் பயன்பெற்றனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 12—6—80 வியாழக்கிழமை மாலை 7-00 மணிக்கு நிலைய மன்றத்தில் சென்னை திரு. வி. என். ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு, புலவர் திரு. என். இராம லிங்கமும். திரு. இராமமூர்த்தி அய்யரும் வேளூர்ப் பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினர்கள்.

விழாத்தலைவர் திரு. வி. என். ஆறுமுக முதலியார் அவர்கள் தமது உரையில் தருமை ஆதீனத்தில் நடந்த குருபூஜை விழாவைத் தொடர்ந்து வந்திருக்கும் மண்டலாபிஷேகக் கிருத்திகை நம் எல்லோருக்கும் ஒரு விசேஷ முக்கியத்துவம் உடையது. தருமையாதீன மடத்தை ஸ்தாபித்த ஸ்ரீ குருஞானசம்பந்தரின் வரலாற்றை எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் இயற்றியுள்ள "சிவபோக சாரம்" என்ற நூலில் பலபாடல்கள் அடங்கியுள்ளன. இந்த நூலை எல்லோரும் வாங்கிப் படிக்கவேண்டும். முருகன் அருள் இருந்தால் தான் அவனுடைய அருளைப்பற்றித் தெரிந்துகொள்ளமுடியும் அந்த அருளைப் பெற நாம் முதலில் குருவை நினைத்துக் குருவருள் பெற வேண்டும். திருவருள் பெற்று ஆண்டவனைப் பணிவுடன் நினைத்து எப்போதும் நன்றி செலுத்திக் கொண்டிருக்கவேண்டும். குருவருள் பாலிக்கும் சுவாமிகளுக்கும் எப்போதும் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சிவபோகசாரத்திலிருந்து சில பாடல்களையும் கூறி விளக்கினார்கள்.

திரு. பி. வி. வெங்கடேஸ்வரன் (D. S. P.) "மனமும் பாசமும்" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கி மனதை ஒடுக்கி ஆண்டவனிடம் பக்தி செலுத்தி வாழ வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள். பின்னர் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

1980 ஜூன் மாத சமயப் பிரசார வழிபாடு 29—6—80 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணி முதல் 8-30 மணி வரை சென்னை திருவல்லிக்கேணி சுந்தரமூர்த்தி விநாயகர் கோயில்தெருவில் உள்ள ஸ்ரீ எல்லையம்மன் கோயிலில் நடைபெற்றது. மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அருச்சனைகளும் நிகழ்ந்தன. வழிபாட்டின்போது புலவர் திரு. என் இராமலிங்கம், திரு. என். இராமமூர்த்தி அய்யர், ஆர். கௌரி ஆகியோர் திருமுறைப்பாராயணமும் நாமாவளிகளும் பாடினார்கள். நாமாவளிகளில் ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் கலந்து கொண்டனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. நிலைய அன்பர் குருஜி ஜி. கண்ணன் வரவேற்புரையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்படி சென்னை பிரசாரநிலையம் சமயப்பணியும், சமுதாயப்பணியும், மொழிப்பணியும், ஒல்லும் வகையெல்லாம் செய்துவருகிறது. வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் மாதந்தோறும் பொதுமக்களுக்குப் பயன்படும்படி விநியோகம் செய்வது போற்றுதற்குரியது. பிரசாதத்தைப் பெறுகின்ற மக்கள்

உடல் நலம் பெறுகிறுர்கள். இன்னும் திரளாக மக்கள்கூடி, பிரசாதத்தைப் பெற்று உய்யவேண்டுமென்பது என்னுடைய அவா என்று கூறி, அனைவரையும் வரவேற்றுப் பேசினுர்.

அடுத்து திரு. நஜன் அவர்கள் பேசுகையில் முதன்முதல் இந்தச் சென்னை பிரசார நிலைய மாத வழிபாட்டில் கலந்துகொண்டேன். இதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அபிஷேகமும் ஆராதனையும், வழிபாடும், தேவாரப்பாடல்களும், நாமாவளிகளும் என்னை மெய்மறக்கச்செய்து உள்ளத்தை உருக்கிவிட்டது. மாதத்திற்கு ஒருமுறை செய்யும் வழிபாட்டை வாராவாரம் செய்தால், இன்னும் சிறப்பாக மக்களையும் பக்தி நெறியில் வாழச்செய்ய முடியும். இந்நெறி வளர்க்கப்பட்டால் அன்பு அறிவு, அடக்கம், தியாக மனப்பான்மை முதலிய அரும் பண்புகள் மக்களிடையே ஏற்பட்டு நாட்டிலே சுபிட்சம் நிலவும். இதைவிட வேறு வழியில்லை அதுவும் தருமையாதீனத்தின் ஞானபீடத்தில்உள்ளவர்கள் ஆணையினுல் நடைபெறும்இவ் வழிபாடு மக்கள் உள்ளத்தை ஈர்த்து ஆஸ்திகநெறியில் வாழச் செய்கிறது. குருஜி ஜி கண்ணன் அவர்கள் மாபெரும் சக்திஉபாசகர். அவர் இம்மாதவழிபாட்டில் கலந்துகொண்டது சிவனேடு சக்தி சேர்ந்தது போல அமைகிறது. சிவமும் சக்தியும் சேரும்போதுதான் உலகமே இயங்குகிறது என்று சொல்லி ஆதீன வழிபாட்டைப் பாராட்டிப் பேசினுர்.

அடுத்து நிலைய மாலை தமிழ் வகுப்புப் பேராசிரியர் திரு. A. J. இராமசுவாமி முதலியார் பேசுகையில் மனம், மொழி, மெய் மூன்றும்ஒன்றுசேர்வது வழிபாட்டினுல்தான். இந்தப்பயிற்சி உயர்ந்த பேரின்ப நலத்தை உண்டாக்கும். இம்மையில் வீடும் சோறும் தரும் என்று பல கருத்துக்களை எடுத்துரைத்தார்.

அடுத்து, பிரசங்க பூஷணம் குமாரி R. கௌரி பேசுகையில், குருவின் பெருமையை உணர்ந்து அவரையே தஞ்சம் அடைந்து ஞான உபதேசம் பெற்றுக் கேட்டுச் சிந்தித்து நிட்டை கூடினுல் மனிதன் பெறவேண்டிய உயர்ந்த நிலை கிட்டும். எனவே நமக்கு நடமாடும் தெய்வமாகத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விளங்குகிறுர்கள். அவர்களைத் தரிசித்துக் குருவருள் பெற்று நாம் உய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குருஜி ஜி. கண்ணன் எல்லோருக்கும் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்.

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**ரௌத்திரி௵ ஆடிமீ 1உ முதல் 32உ முடிய.**

**( 15—7—80 முதல் 16—8—80 முடிய )**

| | | | |
|---|---|---|---|
| | | சு | பு |
| | இராசி | | சூ ரா |
| கே | | | ல / கு சனி சந் |
| | | | செ |

| | | | |
|---|---|---|---|
| செ ரா | | | |
| | அம்சம் | | சூ |
| பு | | | ல / சந் |
| சனி | | | கே சு கு |

ஸ்ரீ ரௌத்திரி௵ ஆடிமீ 1உ புதன்கிழமை பூர நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 8 நாழிகை 52 விநாடிக்கு சிம்ம லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் மிதுனராசியிலிருந்து கடகராசி சங்கிரமணமாக ஆடிமாதப் பிரவேசம் செய்தருளுகிறார். அன்று தட்சிணாயனபுண்ணியகாலமாகும். சஸ்யாதிபதி புதன் ஆகிறார். அதனால் கரிய மேகங்கள் கலந்து நாடுகளில் ஆங்காங்கு பரவலாக மழை பெய்யும். சங்கிரமகால கிரகஸ்திதியினால் நாட்டில் பருத்தி ஆடை, காகிதம், பால்பண்டம் இவற்றில் உற்பத்தி பெருகுவதற்கான துரிதசெயல்முறை திட்டங்கள் ஏற்படும். மக்கள் தொழில் துறைகளில் உழைப்புடையவர்களாவார்கள். மக்களுக்கு வாழ்க்கை அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி மலிந்து லோக நாடுகளில் மன்னர்கள், ஜனாதிபதிகள், மந்திரிகள் தர்மநெறியில் பரிபாலனம் நடத்துவர் அறநிலையங்களில் தர்மகர்த்தாக்களினால் தொன்றுதொட்டு நடந்துவருகின்ற தர்மங்களும் புதிய சிவபுண்ணிய தர்மங்களும் இறைவன் சித்தமாகத் தொடர்ந்து நடைபெறும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூருவஞானத்தின் உயர்வில் ஈசன் கட்டளையின்படி வந்து ஞானதிக்கர்களாகத் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் தம் சிஷ்யகோடிகளுக்கு அனுக்கிரகம்பாலித்து, ஞானசாரநியம விதிகளைப் போதித்து ஆசி அருள்வார்கள். லோகமெங்கும் சிவசமயம் பரவும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் சிறப்பாகநடந்துவரும். பிரஜைகள் தெய்வபக்தியாக, தூய உள்ளத்துடன் செயலாற்றி உயர் வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பண வருமானம் வரும். போஜனாதி சௌகரியங்கள் நல்ல விதமாக இருந்து வரும். சகோதரருக்கு அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். வாகன சுகம் திருப்தியளிக்கும். எழுத்துமூல விஷயங்களில் பத்திர லிகிதங்களில் 15உக்குமேல் நல்லன ஏற்படும். எல்லாக்காரியங்களிலும் ஜெயபிராப்தியை அளித்துவரும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆடிமீ" 7உ 19 நாழிகை 35 விஞடி முதல் 9உ 42 நாழிகை 26 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் குறிப்பிட்டிருந்தவிதங்களில் பணவருமானம் வருவதாகும். வித்தியாபியாசாதி கலைத்துறைகளில் நற்பலபிராப்தியை உண்டுபண்ணும். பெற்ருேர் குடும்பத்தினர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். எல்லாக் காரியங்களும் கண்யமாக செயல்பட்டுக்கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆடிமீ" 9உ 42 நாழிகை 26 விஞடிமுதல் 11உ 58 நாழிகை 55 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமமாக இருந்துவரும். சகோதரர் பாகப்பிரிவினை பிரச்சினை எழும். இயந்திரவாகனம் பழுதாகி

சீர்படும். மாதப் பின்பகுதியில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் 15உ முதல் நற்பல பிராப்தியை ஏற்படுத்திவரும் தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். ஆடிமீ 11உ 58 நாழிகை 55 வினுடி முதல் 14உ 10 நாழிகை 3 வினுடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவருமானம் வந்துகொண்டிருக்கும். அவசிய விஷயங்களில் செலவினங்களும் ஏற்படும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். வாகனபிராப்தி திருப்தியளிக்கும். தேகத்தில் உஷ்ணபீடிதம்காணும். வித்தியாவியாபாராதிகளில் செய்தொழிலில் பொருள் முதலீடுசெய்யும். பூமியில் இயந்திரசாதனங்களில் விருத்தி ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆடிமீ 14உ 10 நாழிகை 3 வினுடி முதல் 16உ 17 நாழிகை 32 வினுடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் பலவிதத்தில் வந்துசேரும். மிதமிஞ்சிய செலவும் ஆகும் சகோதரம் பிதா இவர்களின் நலம் கருதி பொருட் செலவாகும். சில சந்தர்ப்பங்களில் மனோவேகம் ஏற்படுதல் பின் தணிதல் ஆகும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்வதால் காரியங்கள் தடையின்றி நடைபெறும். 9உ முதல் ஜீவனோபாயத்தில் நல்ல ஸ்திதி ஏற்படும், தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆடிமீ 16உ 17 நாழிகை 32 வினுடி முதல் 18உ 23 நாழிகை 23 வினுடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கண்யநிலைமைக்கு ஏற்பவரும். மாதா மனைவி வழியினரின் நலன்களில் அதிக ஈடுபாடும் மதிப்பு உயர்தலும் ஆகும். சகோதரர் கல்வி தொழில் துறைகளில் முன்னேற்றமாக விளங்குவர். புத்திரனுக்கு நல்ல நிலைமை ஏற்படும். ஜீவனோபாயத்தில் அரசாங்க

தன்மையை ஏற்படுத்தும். ஆடிமீ 18உ 23 நாழிகை 26 வினுடி முதல் 20உ 30 நாழிகை 11 வினுடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾**

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் மனைவி வழியினர் இவர்களால் செலவுகளும் ஆகும். ஆடுவாகனங் களில் நல்லஸ்திதி ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜீவனோபாயத்தில் 15உ க்குமேல் ஓர் உயர் வான நிலைமையை ஏற்படுத்தும். ஆடிமீ 20உ 30நாழிகை 11விநுடி முதல் 22உ 39 நாழிகை 42 விநுடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.**

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதர ருக்குச் சௌக்கியபலன்தரும். பூமியில் விருத்திபலன் ஏற்படும். பிதாவின் உடல்நலம் பாதித்து உடன் குணமாகும். அடிக்கடி வெளி யூர் பயணம் ஏற்படினும் காரியசாதனை ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆடிமீ 22உ 39 நாழிகை 42 விநுடிமுதல் 24உ 54 நாழிகை 8 விநுடி வரையில் சந்திராஷ்ட மம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼**

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் 15உ அளவில் நற்பலன்வரும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்து வரும். புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆடிமீ 24உ 54 நாழிகை 8 விநுடி முதல் 27உ 14 நாழிகை 31 விநுடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$**

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துவரும். சகோதரர் பெற்ருேர் இவர்களின் உடல்நலம் பாதித்து உடன் குணமாகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனைசெய்ய நலம்தரும். வித்தியா வியாபாராதிகளில் எழுத்துமூல விஷயங்களில் சிலாக்கியபலன்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஆடிமீ 27உ 14 நாழிகை 31 விஞடி முதல் 29உ 40 நாழிகை 45 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். போஜனுதிசௌகரியங்கள் நல்லவிதமாக இருந்துவரும், கால்நடைவாகனபிராப்தி பால்பிராப்தி திருப்தியளிக்கும். 15உ அளவில் வித்துவத்துவத்தில் ஓர் நன்மை உண்டாகும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனைசெய்ய விபத்து நீங்கும். காரியஜெயமாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆடிமீ 3, 4, 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்

**12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$– உத்திரட்டாதி – ரேவதி.**

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தேவைக்கேற்ப அவ்வப்போது பணவருமானம்வந்துகொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியங்கள் அனுபவித்தல் ஆகும். புத்திரர் பௌத்திரர்களிஞல் சந்துஷ்டி ஏற்படும். தாம்பத்திவாழ்வில் சுமுகம் நிலவும். எல்லாவிஷயங்களிலும் அனுகூலம் ஏற்படும். ஆடிமீ 4உ 51 நாழிகை 54 விஞடி முதல் 7உ 19 நாழிகை 35 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

# 'SAMAYA & SIDDHANTA

MEYKANDA DEVA : The Saiva Siddhanta Sutras and Commentary, Translated into English by H. R. Hoisington, and Edited with Preface Notes and Text Appendices by N Murugesa Mudallar, Published by Dharmapura Adhinam. Dharmapuram, Mayuram 609 001. U. K. 10 sh; U. S. A. 1 Dollar.

Saiva Siddhanta is no less Samaya than Siddhanta but it is more than a mere blend of a specific religion with its philosophy. One could see in it a synthesis of several philosophies and a harmonization of religious beliefs and practices in general. Its conceptions and delineations are richly symbolic, though it does recognise the role of ritual in religious life By taking religion to its roots, it would liberate religion from dogma and provide forms of worship with a rationale. Into its philosophy are woven strands of Nyaya logic and epistemology as well as the mysticism of yoga, with its emphasis on inward withdrawal and illumination As religion, its key-note is love and self-surrender, which cleanse the soul of its malas and renders it fit for a direct vision of God and awaken it into a state of blissful union with Him. The rooting out of the ego-sense, the shedding of all Anava dross serves directly to snap the bonds of Pasa, terminate all Karma and raise the self to its full stature transcending Maya. Man's personality as a pasu is both a condition and a consequence of his Karma. Enveloped in the Malas

[P. T. O.]

* இந்நூலைப் பெற விரும்புவோர் நூலின் விலை ரூ. 10—00. பதிவு அஞ்சல் செலவுடன் தபாற் செலவு ரூ. 2—50 ஆக ரூபாய் 12-50ம் மணியார்டர்மூலம். 'மேலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம், தருமபுரம், மாயூரம்-609 001' என்ற முகவரிக்கு அனுப்பிப் பெறுவார்களாக.

he acquires an individuality and persists in asserting it through wrong living. Moksha, as the consummation of all moral and spiritual discipline, is both self-realization a God-realization, in which Pati-gnana brought about by Pasa-kshaya is a unique experience of self-awakening in God consciousness.

The quintessence of Saiva Siddhanta, as outlined above, is contained in the twelve Sutras of Meykand's Sivagnana Bodham, whose text in transliteration is given in the Appendix of the present publication along with an authoritative Sanskrit version of the Sutras and lucid rendering of the same in English by Prof. P. Thirugnan-sambandhan. A Kannada transliteration of The Tamil original and a French translation of the Sanskrit text add to its value. These serve also to show that Saiva Siddhanta has received recognition beyond the boundaries of Tamil and Sanskrit. Rev R. Hoisington's own translation and brief commentry, — authentic and insightful — regarded by scholars as "probably the earliest", would bear testimony to the interest it evoked more than a hunderd years ago among European savants. Translations of other Saiva Siddhanta works are also known to have been done by Dr. G U Pope and Rev. H W Schomerus, Nearer home, pioneers in the field like the late J. M Nallasami Pillai had done considerable spade-work for presenting Saiva Siddhanta on the canvas of world-religions and perennial philosphies.

Sri Meykanda Deva belonged to the thirteenth century A. D. It is of the nature of a Sutra that it calls for commentaries. The beauty of the text in Tamil is matched only by its marvellous elaboration in verse-form by Sri Arulnandi Sivacarya's Sivagnana Siddhiyar. Other expository works in Tamil and Sanskrit follow the Bodhom and the Siddhiyar. The Dharmapura Adhinam deserves the gratitude of the religious-minded for publishing a work of such enduring interest and value.

—THE HINDU, 1—7—80.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press, Dharmapuram Mayuram 10 7 80